1156

M. 2210

டி சங்

Authoress & Proprietrix } வை. மு. கோதைநாயகி
(MRS. V. M. PARTHASARATHY

ஜகன்மோகினி

மலர் 10 | 1933 வரு ஆகஸ்ட் | இதழ் 3

OFFICE OF THE REGISTRAR OF BOO
26 AUG 1933
MADRAS

சோதனையின் கொடுமை

அல்லது

செல்வமே சொர்க்கம்

“சாச்வதமற்ற செல்வமே! நீ கொலைக்கும் அஞ்சாயோ? உன்னை நம்பி மோகங்கொண்டுழலும் மனிதரை நீ ஓர் கொடிய விஷமெனச் செய்து அவர்களது எண்ணம் முதல் சகல செய்கைகளையும் விஷமாகவே முடித்து விடுகிறயே! இதுவோ நின் மகிமை! உலகத்தில் செல்வமே சொர்க்கமென்பதைப் பார்த்தீர்களா?”

(பக்கம் 110)

விலை ரூ. 1-8-0.

முன்பணமைப்பித் தபால் செலவின்றி பெற்றுக்கொள்ளுங்கள்.

சந்தாதாரர்களுக்கு விலை ரூ. 1-4-0.

தனிப் பிரதி விலை: உள் நாடு, அணா 2

“...மோகினி” ஆபீஸ்,
...ரு, திருவல்லிக்கேணி, மதரூஸ்.

...மாதமும் கடைசித் தேதியில் சஞ்சிகை வெளியாகும்.

JL
N33.10.8
21004

முக்கிய அறிக்கை.

ம்ருதாஞ்சனம் டிபோவினுடைய

படை மருந்து

இது வரையில்

விலியம் அண்டு கம்பெனியாரின்

"ராஜா ராணி" மார்க்குள்ள படை மருந்தை பிறர் அது போலவே தயார் செய்து மோசம் செய்து வருகிறபடியால் சில மாதங்களாய் ஷை மார்க்கு கீழ்க்கண்டபடி மாற்றப்பட்டு

மூன்று வர்ணங்கள் கூடிய "சூரியோதயம்"

அம்ருதாஞ்சனம் டிபோ

என்று இருக்கும். ஆகையால் அனைவரும் இவ்விஷயத்தை முக்கியமாய் கவனிக்க வேண்டுகிறோம். மார்க்கு மாற்றப்பட்டதே தவிர மருந்தில் எவ்வித மாறுபாடுகளுமில்லை என்று உண்மையாய்க் கூறுகிறோம்.

அம்ருதாஞ்சன் டிபோ

பம்பாய், சென்னை.

மொத்த வியாபாரிகள்:—

1. ஏ. பி. பாரேக்கு, மதருஸ். 2. ஷியாம் கம்பெனி, மதருஸ்

தான் காதலித்திருக்கும் விஷயத்தை என்னிடத்தில் தப்பி, கூட ஒரு தினமும் தெரிவித்ததில்லை. ஜாடையாலும் கொள்ளும்படியாக நடக்கவில்லை. இது எனக்கு மிக மிக விட விருக்கிறது.

நாயுடுகாரு! இந்த பைத்தியக்காரப் பையன் என்னுட ஏன் இவ்விஷயத்தைத் தெரிவிக்கவில்லை? இதை யொளிப்பதற்கு காரணம் என்ன! என்னிடம் இதைத் தெரிவித்திருந்தால் நான் அன்றே அவன் மனம் களிக்கும் வண்ணம்—காதல் பூர்த்தியாகும் வண்ணம்—என் உள்ளம் குளிரும் வண்ணம்—நான் அவ் வனி தையை மணம் செய்து வைத்திருப்பேனே! ஐயோ! காரியமெல்லாம் கெட்டு விட்டதே! அவ் வனிதா ரத்தினத்தையா காணவில்லை! இதென்ன அனியாயம்! நாயுடுகாரு! எனக்கு இச் செய்தி தெரிந்த பிறகுதான் அந்த வனிதையினிடத்தில் அன்பு உதித்தது என்று எண்ண வேண்டாம்; என் மகன் அவளைக் காதலிக்காதிருப்பினுங் கூட என் மாதவனின் உயிரைக் காத்த மாதவள்மீது எனக்கு அன்று முதல் அத்யந்த அன்பு உண்டு. இச் செய்தியைக் கேட்ட தும் நான் அவளைத் தேடுவதற்குச் சுகுமாரனைத் தூண்டி முயற்சித் திருப்பேன். என் மாதவனைக் காப்பாற்றியதற்குப்பிரதி உபகாரமாக நான் அவளைத் தேடுவதற்குக் கடமைப் பட்டிருப்பதாக எண்ணிச் செய்வேன்.

நாயுடுகாரு! அந்த வனிதை என் வீட்டிற்கு வந்து கொண் டிருந்த நாட்களில் அவளுடைய பூர்வீகத்தைக் கேட்டதுண்டு. அவளுக்கு ஏதும் தெரியாதென்று கூறிவிட்டாள். இன்னமும் அது தெரியவில்லை என்று தெரிகிறது பற்றி விசனமாக விருக்கிறது. தாங்கள் இவ் விஷயத்தில் முக்யமாகச் சிரத்தை வகித்து அவ் வனிதையின் இருப்பிடங் கண்டு பிடிப்பதோடு, பிறப்பு வளர்ப்பு முதலிய ரகஸியத்தையும் கண்டு பிடிக்கவேண்டும். நாயுடுகாரு!

ஒரு பாஷையையோ, சங்கீதத்தையோ, தையல் முதலிய கைவேலை களையோ கற்றுக்கொடுக்கும் அருமையான வழியை அறிந்தவர்களிடம் மேற்கண்டவைகளைக் கற்றுக்கொண்டால்தான் 'நமக்கும் வருமா!' என்ற பெரிய சந்தேகம் கொண்டிருந்தவர்களுக்கும் நன்ருக வந்துவிடும்.

[torn] ந விஷயம் தங்களை வேண்டிக் கொள்கிறேன். என் மரு
[torn] ந மிகவும் அபாண்டமான பழி சுமத்தி குற்றவாளியாக்கிய
[torn] னத் தாங்கள் எவ்விதமாகவாவது பழிக்குப் பழி வாங்கிவிட
[torn] டும். என் மகளும், மருமகனும் சிறைச்சாலையை விட்டு
[torn] லையாகாவிடினும் அவர்களை இக் கதிக்குக் கொணர்ந்த பாவி
[torn] யத் தாங்கள் சரியானபடி பலனடையச் செய்யவேண்டும். இது
[torn] ன்னுடைய மிகவும் முக்கியமான கோரிக்கை. இதற்குத் தாங்கள்
வாக்குக் கொடுக்க வேண்டும். தாங்கள்தான் எனக்குத் துணை"
என்று மிகவும் கெஞ்சிக் கேட்டாள்.

கோமளவல்லி யம்மாளின் அன்பும், அறிவும், அனுபவமும் ததும்பிய வார்த்தையைக் கேட்டு நாயுடு மிக்க சந்தோஷமும் ஆநந்தமும் அடைந்தார். திலகவதியை முன்பின்னறியாது காதலித்ததற்கு சுகுமாரன் மீது கோபித்துக் கொள்வாளோ என்று நாயுடு எண்ணியதற்கு மாருக அந்த அம்மாள் காதலின் மகிமையை அறிந்து அதற்கு அனுகூலமாகப் பேசியது அந்த அம்மாளின் விவேகத்தை நன்கறியச் செய்தது. நாயுடு வெகு சந்தோஷத்துடன் பேசத் தொடங்கி "அம்மா! தங்களின் குமாரர் மூலம் தங்களுடைய குணாதிசயங்களைப் பற்றி அறிந்திருக்கிறேன். இன்று நேரிலேயே நன்ருகத் தெரிந்து கொண்டேன்.

அம்மா! நீங்கள் பயப்படவேண்டாம். என்னால் கூடியவரையில் உழைத்து உங்கள் மனம் களிக்கச் செய்கிறேன். சுகுமாரன் விஷயத்தில் ஏதும் கெடுதிகள் நேராது. முன்பொரு காலத்தில் புரட்சி இயக்கத்தில் சம்மந்தப்பட்டதாகச் சிறைவாசம் செய்யவில்லையா! அதுபோல இப்போதும் சில தினங்கள் இவ்விதம் கஷ்டப்படவேண்டியது விதி. திலகவதியைப்பற்றி நான் இந்த நிமிடம் முதல் ஆராய்ச்சி செய்கிறேன். அவ்வப்போது கிடைக்

முருகன்:—உனக்கு எத்தனை கட்டையப்பா சரியாக விருக்கும்?

வேலன்—உயிருடனிருக்கும்போதே உனக்கு எத்தனை கட்டை என்ருல் என்ன சொல்ல முடியும். இறந்த பிறகல்லவோ கட்டை தேடுவார்கள்.

கும் விஷயத்தைக் கூறுகிறேன். தாங்கள் மட்டும் சற்றுப ரியமின்றிக் கடவுளை நம்பி இருக்கவேண்டும். நான் சென்... றேன்.'' என்று தைரியங் கூறிவிட்டுப் பின்னும் சில விஷ... அந்த அம்மாளிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு சென்றுவிட்ட...

கோமளவல்லியம்மாள் சுகுமாரனின் காதல் விஷயத்தை எண்ணி எண்ணி, உள்ளம் பூரிக்கிறாள். அவனுக்கு நேர்ந்த கதியை எண்ணிக் கண்ணீர் வடிக்கிறாள். அவனை ஜாமீனில் விடுவிக்கவேண்டிய ப்ரயத்தனங்களைச் செய்ய நாயுடுவிடம் கூறினாள். அதற்குச் சர்க்காரும் ஒப்பமாட்டார்கள். சுகுமாரனும் தான் அவ்வாறு வெளியிலிருக்கப் பிரியப்படவில்லை யாதலால் அவ்விதம் செய்யவேண்டாம் என்று அவன் கூறிவிட்டதோடு, தாயாருக்கு வேண்டியவரையில் தேறுதல்களைக் கூறினான். கடவுளைத் தியானிக்கும்படிக்கும், நாயுடுவுடன் கலந்து செய்யும்படிக்கும் கூறினான். திலகவதியே தன்னுயிர் நிலையாதலால் அவ்விஷயத்தில் வேண்டிய காரியங்களைக் கட்டாயம் செய்யும்படியாக வேண்டிக்கொண்டான். சுகுமாரனின் மனோதிடத்தையும் காதலின் ஆழத்தையுங் கண்டு வியந்தாள். மகனின் வாக்கை மகிமையோடு ஏற்று வந்த கோமளவல்லியம்மாள் ஒவ்வொரு சமயமும் நாயுடு எத்தகைய செய்திகளைக் கொண்டு வருவாரோ என்று அதே நினைவாகவிருந்தாள்.

சுகுமாரன் உயர் குலத்து மனிதன் என்றும், அபாரமான சாமர்த்தியசாலி என்றும், சாரணர் படையில் புகழ் பெற்ற வீரன் என்றும், கல்வியில் சிறந்து விளங்கியவன் என்றும், சீமைக்குச் சென்று படித்து வந்த தீரன் என்றும், செல்வச் சீமான் என்றும் எல்லோருக்கும் தெரியும். எனினும் நரசோரமான இவ்வழக்கில் அவனை விட்டுவிடவோ வழ வழ, கொழ கொழ செய்யவோ சட்டமும் சந்தர்ப்ப சாக்ஷியும் இடங்கொடாமையினால் அதிகாரிகள் அவனை வெகு மரியாதையாகவே நடத்தி, மரியாதையாகவே கேட்டு

முருக:—ஐயோ! என்னடா விபரீத அர்த்தம் செய்துவிட்டாய்! உனக்கு எத்தனை கட்டை ச்ருதி என்றுதான் கேட்டேனப்பா! கோபிக்காதே!

ள். திலகவதியின் கைப்படவே கடிதம் கிடைத்திருப்ப
தையே யோர் ஆதாரமாகக் கொண்டு "ஐயா! தாங்கள் உண்
பக் கூறி விடுங்கள். தாங்கள் காதலின் முதிர்ச்சியால் அவளை
த்திருக்கக் கூடுமல்லவா? எப்போதும் இது சகஜந்தான்"
று எல்லாம் எத்தனைக் கேட்டும், சுகுமாரன் "எனக்கு அவளைப்
றிய விஷயமே தெரியாது" என்று கண்டிப்பாய்க் கூறி விட்டான்.

இன்ஸ்பெக்டர் இ. டி. அப்பனும் அவருடைய சகாக்களும் எத்தனையோ தீவிரமாக முயற்சி எடுத்துக் கொண்டு திலகவதியைத் தேடலானார்கள். நாயுடுவுக்கு மட்டும் தான் வேலை செய்வது போலீஸாருக்குத் தெரியாம லிருக்கவேண்டும் என்கிற எண்ணம் பூர்ணமா யிருப்பதால் அவர் இவ்விஷயத்தில் உழைப்பதாகவே வெளியாருக்குக் காட்டிக் கொள்ளவில்லை. அவ்வப்போது கோமளவல்லி யம்மாளிடத்தில் மட்டும் வந்து பேசிச் செல்வார்.

அங்கச்சி யம்மாள் தனக்குப் புதையல் அகப்படும் சமயம் கிட்டிவரும் பெருமையில் இந்த கேஸ் விஷயத்தைக் கூட ஓர் பொருட்டாக எண்ணவில்லை. கணபதிக்கோ "திலகவதி எங்கு ஓடி ஒளிந்து கொண்டிருப்பாள்?" என்கிற யோசனை பெரியதாகிவிட்டது. அது விஷயத்தில் இன்னதென்று தகவல் தெரியாமல் குழம்பி விட்டான். சோமுவுக்கும் இதன் உண்மை இன்னதென்று தெரியாமல் திகைப்பும், ப்ரமிப்பும் உண்டாகி விட்டன. அங்கச்சி யம்மாளைப் பல தரம் கேட்டான். அவளிடமிருந்து சரியான தகவல் கிடைக்காமையினால் அவனும் இவ்விஷயத்தில் ஒரு பங்கு எடுத்துக்கொண்டு தேடவாரம்பித்தான். நாம் முன்னதிகாரத்தின் இறுதியில் தெரிவித்ததுபோலப் பேசிக்கொண்டிருந்தான்.

சிறகு ஒடிபட்ட பறவையைப் போல நம் திலகவதி அந்த ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்ததும் சோமுவின் ரூபத்தைக் கண்ட

வேலையகப்படாது திண்டாடுகையில் எந்த சேவகத் தொழிலானாலும் செய்யலாம் என்று சிலருக்குத் தோன்றுகின்றதாம். 30 ரூபாய் சம்பளத்தில் சிறிய வேலை அகப்பட்ட பிறகு தம் வீட்டில் ஒரு வேலை செய்வதையும் அகௌரவமாகக் கருதுகிறார்கள்.

மாத்திரத்தில் தன்னை யவன்தான் கொண்டுவந்து
கிற ஓர் ஆவேசம் அவள் மனத்தில் பொங்கி மூர்ச்சை
டாள்—என்று சென்ற அதிகாரத்தின் இறுதியில் தெரிவ
மல்லவா! தடாரென்று அந்த மேஜையின் மீது காம்பொடி
தாமரையைப் போலும், வெட்டிச் சாய்த்த மரம் போலும் அ
கோலமாக விழுந்து விட்ட பிறகு அவளுக்குப் பிரக்ஞையே இ

ஏற்கெனவே உண்டான மன அதிர்ச்சியுடன் உ
லிருந்து விழுந்து விட்டதால் சீக்கிரத்தில் தெளிவு உண்டாக
பிறகு வெகு நேரங் கழித்து அவள் கண் திறந்து பார்க்கும்
தான் தாறுமாறுமாக மேஜைமீது விழுந்தபடியே கிடக்கக் க
மெல்ல எழுந்தாள். தன்னையே தான் சமாளித்துக்கொண்டு
டும் அந்த ஜன்னல் வழியாகப் பார்த்தாள். அப்போதும் சோமு
வும் இன்னும் சிலரும் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டாள். தான்
இப்போது என்ன செய்வதென்று யோசித்துத் தன் மனத்திற்குள்
ஒரு முடிவுக்கு வந்தாள்.

தன்னுடைய குரல் எட்டிய மட்டும் கூச்சலிட்டு "சோமு மாமா! சோமு மாமா!" என்று கத்தினள். அதற்கும் அங்கிருந்து திரும்பிப் பார்க்கவில்லை. அதைக் கண்ட திலகவதி தான் கத்தியது அவன் காதில்தான் விழவில்லையோ! அன்றி வேண்டுமென்றே பேசாமலிருக்கிருனே என்றதை யறியாமல் மீண்டும் பலமான சத்தமிட்டுத் தன் தொண்டை வலிக்க முன்போலவே கூச்சலிட்டாள். அச்சமயம் அவனேடு பேசிக்கொண்டிருந்த மனிதன் இக்குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்ப்பதுபோல் இப்பக்கம் நோக்கினன்.

சிலருடைய மனோவேகத்தின் டிக்கிரி எவ்வளவு இருக்கிறதென்று அவர்கள் பேசுவது, பார்ப்பது, செய்வது ஆகிய மூன்றினாலும் வெளியாகிவிடுகின்றது. அப்படி வெளியாகிவிட்டதை அறிந்த பிறர் அதைப் பற்றிக் கேட்கையில் அதை மறைக்கவும், சாதிக்கவும் முற்படுகிறார்கள். ஏன்? முதலிலேயே ஜாக்ரதையாக விருந்தால்?

...மயம் சோமுவும் இந்த திசையில் சுற்றிச் சுற்றிப் ...ன. அவன் இங்ஙனம் பார்ப்பதை யறிந்த திலகவதி ...மு மாமா! சோமு மாமா! நான் கூப்பிடுவது உங்கள் காதில் ...கவில்லையா! இப்படி வாருங்கள்! அனாதைப் பேதையாகிய ...னைத் தாங்கள் இவ்விதம் செய்வது தகுமா?'' என்று பெரியதா ...த்தினாள். இக்குரலே சோமுவின் காதில் நன்றாகப் பட்டது. ...ம் எங்கிருந்து இக்குரல் வருகிறதென்பதை நன்றாக அறியா ...முன்னும் பின்னும் அலைந்தவாறே நாற்புறமும் பார்த்தான். ...வதி இவ்விடத்தில்தான் இருக்கிறாள் என்பது அவனுக்கு நன்கு ...ப்பட்டு விட்டது. உடனே அவன் வெகு சந்தோஷம் ஒரு புற... அதை யடக்கிக் கொண்டு சாதுத்தன்மை யொரு புறமுமாக ...வைத்தவனைத் தன்னுடன் பேசிய ஆசாமியோடு பேசிக்கொண்டே உள்ளே வந்தவாறு "இங்கு என்ன குரல் கேட்டது. யாரோ கத்து வது போலத் தோன்றுகிறதே! என்ன செய்வது?'' என்று கேட்டான்.

மற்றவன் :—இங்கு கூச்சலிடுவதைப் பற்றிக் கேட்க வேண்டுமா! எத்தனை பைசாசங்கள் பிடித்தவர்கள் அதை ஓட்டுவதற்காக மந்திரிக்கும் பொருட்டு இங்கு வந்திருக்கிறார்கள். அவைகளின் அட்டகாஸமும் கூக்குரலும் கேட்க வேண்டுமா! மந்திரத் தண்ணீர் இரைத்து வேப்பிலையால் அடித்தால் அவைகள் ஓடிப்போய் விடும். அதுவரையில் இத்தகைய கூச்சல்தான்.

சோமு :—ஓகோ! இந்தமாதிரி வேலைகள் கூடத் தாங்கள் செய்வது வழக்கமா! நான் இதுவரையில் பைசாசங்கள் பெண்களின் மீது ஆடியதைப் பார்த்ததே இல்லை. சொல்லக் கேட்டதுண்டு. இப்போது நான் அவைகளைப் பார்க்கக் கூடுமோ! எனக்கு ஆவலாயிருக்கிறது.

அவன் :—இந்த கோரத்தையும் தாங்கள் பார்க்க வேண்டுமா? அவைகளைக் கண்ட சிலர் பயந்து விடுவதுமுண்டு. 'பேயாட்டம்

சில தந்திரக்காரர்கள் பிறர் வீட்டில் காப்பி சாப்பிடும் நேரத்தை யறிந்து கொண்டு, அங்கு ஒரு வேலையை வைத்துக்கொண்டு சென்று, தன் கைக் காசுக்குச் செலவில்லாமல் அங்கு காப்பி குடித்துவிட்டு வந்துவிடுகிறார்கள். என்ன வேடிக்கை இது!

ஆடிக் கத்துகிருயா!' என்று நாம் வழக்கச் சொல்லாக உபயோகிப்பதில்லையா! அதை நேரில் பார்த்தால் வெகு பயங்கரமாயும் அசங்கியமாயும் இருக்கும். இருப்பினும் பாதகமில்லை அழைத்துச் செல்லலாம். எங்களுக்கு அந்த அதிகாரமில்லையே! எஜமானரின் உத்தரவு வேண்டுமே!

சோமு :—(வியப்புடன்) என்ன! என்ன! எஜமானரின் உத்தரவா! அதென்ன தாங்கள் சொந்தக்காரரல்லவா? தங்களுக்கும் மேல் ஒருவர் உண்டா? இத்தனை நாளாகக் கூறவில்லையே! அவரை நான் பார்க்கலாகாதா! அவர் எங்கிருக்கிறுர்?

அவன் :—அவருடைய உத்தரவுப் படிக்கு நாங்கள் நடக்கிறுமே யன்றி எங்களுடைய சொந்தம் எதுவுமில்லை. எங்கள் குருவை யாரும் பார்க்கவே முடியாது. அவர் சதா காலமும் நிஷ்டையில் தானிருப்பார். அவரிடம் ஏதேனும் விஷய மறியவேண்டுமாயின் அதற்குத் தக்க சமயம் எங்களுக்குத் தெரியும். அதையறிந்து நாங்கள் ஒவ்வொரு காரியமும் செய்வோம். அவரைத் தாங்கள் பார்க்க வேண்டுமாயின் அவரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு பிறகு சொல்லுகிறேன். அப்புறம் பார்க்கலாம்.

சோமு :—என்னய்யா! தாங்கள் இவ்வளவு சினேகிதராக விருந்து இப்படிக் கூறுகிறீர்களே! நான் அவரெதிரில் வராமல் மறைவாக நின்று ஓர் மூலையிலிருந்து பார்த்து விட்டு வந்து விடுகிறேன். பிறகு உத்தரவு கிடைக்கும் போது எதிரில் பார்க்கிறேன்—என்றுன். அவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் திலகவதி முன்போலக் கத்திய குரல் இவன் செவியில் நன்ருக விழுந்தது. உடனே அவ்வாறு கத்தியது திலகவதிதான் என்று சோமு ஒரு நொடியில் அக்குரலிலிருந்து தெரிந்து கொண்டான். "இவர்கள்தான் திலகவதியை அபகரித்துக் கொண்டு வந்து விட்டார்கள்." என்று திட்டமாக எண்ணி

'அப்பா! பெண்களா!' என்று சிலர் கூறுவதற்கேற்ப பெண்களின் கூட்டத்து மத்தியில் மிகவும் அருமையான பாட்டுக் கச்சேரியும், காலக்ஷேபமும் வைத்துவிட்டால் அதைவிட மோசம் வேறு எதுவும் இல்லை. அத்புதமான கச்சேரியைக் கேட்டு ஆனந்திக்காது, ஊர் வம்புகளை யளப்ப

விட்டான். இவர்கள்மீது அவனுக்கு உள்ளுக்குள் ஆத்திரம் மூண்டுவிட்டது. அதை உள்ளடக்கியபடியே அவனோடு பேசிக் கொண்டே சென்றான்.

சோமு கேட்டதற்கு அந்த ஆள் ஒப்புக்கொள்ளாது மறுத்து விட்டான். அன்றே தான் அதிகமாகத் தொணப்பிக் கேட்பது சரி இல்லை என்று எண்ணிய சோமு அவ்விஷயத்தைப் பற்றி அவ்வளவோடு விட்டு விட்டு, அவனிடம் பேசவேண்டிய வேறு முக்ய மான விஷயத்தைப் பற்றிப்பேசி விட்டுப் போய் விட்டான். திலக வதி அதே தோட்டத்து வழியாக சோமு செல்வதையும் பார்த்துக் கொண்டே இருந்தாள். அவளால் கூடிய வரையில் சத்தமிட்டுக் கத்தியதெல்லாம் வீணாயிற்று. அவள் தொண்டையும் வலி எடுத்து விட்டது. மனம் சோர்ந்து போய் "ஐயோ! இனி என்ன செய் வது?" என்று ஏக்கம் பிடித்துப் போய்விட்டாள்.

அந்த ஜன்னலுக்கு எதிர் முகமாக அதே உயரத்தில் மற்றொரு ஜன்னல் இருந்தது கண்டு அங்கு என்ன தெரிகிறது பார்ப்போம் என்று எண்ணி, இந்த மேஜை நாற்காலி முதலியவை களை இழுத்துப் போட்டுக் கொண்டு ஏறிப் பார்த்தாள். ஹா! அவ் வளவுதான் அவள் தேகம் முற்றும் கிடுகிடுத்தது. கண்களை நம் பாது கசக்கிக் கொண்டும், சுற்றி மூடிக்கொண்டும் நின்றாள். அவ ளுடைய ஹ்ருதயம் படபட வென்று அடித்துக் கொண்டது. குபீர் குபீர் என்று வேர்வை கொட்டுகின்றது. "ஹா! இது ஓர் மாந்திரீகன் வீடு போலன்றோ தெரிகிறது. ஐயோ! எத்தனை மண்டை ஓடுகள், எத்தனை மனிதர்களின் கோரமான எலும்புக் கூடுகள், எத்தனை பயங்கரப் பொருள்கள்! அடாடா! நம்மை இப் படி மந்திரத்தினால் மாள வைப்பதற்குத்தான் இங்கு கொண்டு வந்து விட்டார்களா! துர்தேவதைகளின் சிலைகளைக் காண தேகம் நடுங்கு

தற்கே அக்கல்யாணப் பந்தல் அமைந்ததாக எண்ணிப் பலமான மழையின் ஓசையைத் தோற்கச் செய்வதுபோல வம்பு மழையைப் பொழிகிறார்கள். அக்கூட்டத்தில் சங்கீதப் பிரியர்கள் சிலரிருப்பின் அவர்களின் மனம் தத்த ளிக்கின்றது. "குப்பையில் சமலத்தைப் போட்டதுபோல இந்த விடத்

கின்றதே! ஹா! எந்த பக்கம் பார்த்தாலும் விக்ரகங்களும், பயங் கரமான ரூபங்களும் கிடக்கின்றனவே!

ஐயோ! மந்திரம், சூனியம் என்பார்களே! அவைகளெல்லாம் இவைதானே! ஏதோ ஒரு பொம்மையைச் செய்து அதை சுவருடன் சாற்றி ஆணியடித்திருக்கிறதே! ஏன் அப்படிச் செய்திருக்கிறது! அடாடா! இது ஏதோ படுமோசமான செய்கைதான்." என்று தனக்குள் எண்ணி பயப்படாமல் தைரியத்துடன் அவைகளை உற்றுப் பார்த்தாள். தான் இந்த அனியாயக்காரர்களிடமிருந்து எவ்விதம் தப்புவது என்கிற ஏக்கம் பிடித்துவிட்டது; சோமு இத்தகைய சூனிய வகையில் கூடவா காரியம் செய்திருப்பான்! அவன் பெரிய மந்திரக்காரனே! இதென்ன ஆச்சரியம்! அங்கச்சியம்மாள் பலி கொடுக்கும் விஷயமாக யாருடனே பேசியதாகச் சுகுமாரன் சொன்னனே! இந்தப் பாதகனிடம் தான் பேசி இருப்பாளா! ஒன்றும் தெரியவில்லையே! இதென்ன கஷ்டகாலம்!" என்று விசனித்தவாறு கீழே இறங்கினள். அலகையைப் போல அவ்வறையில் இன்னும் என்ன விருக்கிறதென்று சுற்றிச் சுற்றி அலைந்தாள். ப்ரமை கொண்டவள்போல அப்படியே சாய்ந்துவிட்டாள்.

இவளுக்கு வழக்கமாய் வருவதுபோல ஆகாரங்கள் மட்டும் குறைவின்றி வந்துவிட்டன. வேறு எவ்விதமான மார்க்கமும் தான் தப்புவதற்குத் தெரியவில்லை. ஆகாரத்தைச் சாப்பிடாமலிருந்து பார்த்தாள். பசியின் கொடுமை அதிகரித்ததால் பிடித்த வரையில் சிறிது ஆகாரம் உட்கொண்டாள். அன்றைய பொழுது போயிற்று. அவ்விதமே பொழுது கழிந்து கொண்டே சில நாட்கள் சென்று மறைந்துவிட்டன.

முதல் நாள் உள்ளே மனிதர்கள் வந்ததும் வெளியிலிருந்தபடியே பேசியதும் அவ்வொரு நாளுடன் நின்றுவிட்டது. பிறகு

தில் இத்தகைய காலக்ஷேபம் நடக்கிறதே!" என்று வருத்தப்பட நேருகிறது. கதையைச்செய்யும் மனிதர்களுக்கும் சலிப்பு உண்டாகி உற்சாகம் குன்றிப்போய்விடுகின்றது. இத்தகைய வம்புக் கச்சேரிகளின் முன்பு வேறு எந்த கச்சேரியும் அவசியமே இல்லை.

அவ்விதமான செய்கைகள் எதுவுமே நடைபெறவில்லை. திலகவதி உள்ளிருந்தபடியே எத்தனை சத்தமிட்டும், கத்தியும் கதவை இடித்தும் பலனே கிடைக்காதொழிந்தது. திலகவதியின் திகில் அதிகரித்தது. தன்னை எவ்விதம் கொலை செய்தாலும் சுகுமாரனுக்கு ஒரு விதமான கஷ்டமும் இன்றி சுகமாக விருந்தால் போதும் என்ற ஒரே எண்ணத்துடன் நிமிடத்திற்கு நிமிடம் துடித்தவாறு இருக்கிருள்.

ஒரு தினம் பகல் அவ்வறைக்கு வெளியில் "ஹா ஹூ ஹூ ஹீ!" என்ற ஓர் பேரிரைச்சல் கேட்டது. அந்த குரலைக் கேட்ட திலகவதி திடுக்கிட்ட வண்ணம் எழுந்து, அந்த ஜன்னல்மீது எட்டிப் பார்த்தாள். "அந்தோ! என்ன பயங்கரமான செய்கை! நாலைந்து இளம் நங்கைகள் ஸ்நானம் செய்துவிட்டு மஞ்சளில் தோய்த்த ஈரச் சேலையைக் கட்டிக்கொண்டு, நெத்தியில் பெரிய குங்குமப் பொட்டும் அதற்கு மேலும் கீழும் விபூதியும் அணிந்து கையில் ஒரு இரும்புக் கம்பியைப் பிடித்துக்கொண்டு "ஹா! ஹா!" என்று தலையை விரித்துப் போட்டுக்கொண்டு ஆடுகிருர்கள்.

அவர்களுக்கு எதிரில் ஓர் கருத்த தடித்த மனிதன் தாடி மீசையுடன் வெகு முடுக்காக நின்றுகொண்டு கையில் ஒரு கொத்து வேப்பிலையை வைத்துச் சுழற்றிச் சுழற்றி அதை அந்தப் பெண்களின்மீது படும்படியாக வீசி, வாயினுல் ஏதோ மந்திரத்தைச் சொல்லிக் கொண்டிருந்தான். மிகவும் பயந்தவாறும் பதைபதைத்தவாறும் வாடிய முகத்துடனும் சில ஸ்திரீகளும், புருஷர்களும் ஒரு புறமாக நின்றிருக்கிருர்கள்.

முதல் பெண்:—ஐயா! மந்திரக்காரரே! என் குழந்தைக்கு நல்ல குணமுண்டாக்கி விட்டால் உம்மையே நான் தெய்வமென்று நம்புவேன். மூன்று வருஷமாக இந்தக் குழந்தை படும் பாடு கூறவியலாது. எங்களது மனக் கவலை நீங்கும்படியாக உதவி புரிய வேண்டும்.

ஓரிடத்தில் மனத்தைப் பறிகொடுத்துவிட்டு மற்ருேரிடத்தில் கட்டாய விவாகம் செய்துகொள்ளும்படியாக நேர்ந்துவிடும் மனிதர்களின் பாடு வெகு திண்டாட்டமாகிவிடுகின்றது. அச்சமயம் அவர்களுக்குப் பிறர் எவ்

மந்திரக்காரன்:—அம்மா! நான் மந்திரித்துப் பார்த்தேன். உங்கள் பெண்ணைப் பிடித்திருப்பது ஓர் காட்டேரி. அதை ஒட்டி விடுகிறேன் பயப்படவேண்டாம். பெண் சில தினங்கள் வரையில் இங்கேயே இருக்கவேண்டும்! அப்போதுதான் மந்திரத்தால் ஜபித்த தண்ணீரை ஓயாமல் தெளித்துக் கொண்டே இருக்கலாம்; சீக்கிரம் தெளியும்.

இரண்டாவது பேண்:—ஐயா! எங்கள் குடி விளக்கைத் தாங்கள்தான் ஏற்றி வைக்கவேண்டும். எங்களுடைய ஒரே பெண்ணின் இந்த கதியைக் கண்டு நாங்கள் படும் சங்கடம் கூறத்திறமன்று. இவளுடைய புருஷன் இவளைத் தள்ளிவிட்டு வேறு விவாகம் செய்து கொள்வதாக பயமுறுத்துகிறான். தாங்கள் இவளுக்குச் சீக்கிரம் குணமாக்கிவிடவேண்டும்.

மந்திர:—அம்மா! பயப்படவேண்டாம். இந்த அம்மாளுக்குப் பிடித்திருப்பது ஓர் பிசாசு. அதை ஒரு நிமிடத்தில் ஒட்டிவிடுவேன். இவர்களும் இங்கேயே இருக்கவேண்டும். என்று,—கேட்பவர்களுக்கெல்லாம் சரியான பதில் கூறிவிட்டான்; தண்ணீரை அந்தப் பெண்களின்மீது தெளித்த உடனே அவர்கள் கூச்சலிடுவதை நிறுத்திவிட்டுப் பேசாமல் அடங்கிப் படுத்துவிட்டார்கள்.

அவர்களின் தாய்மார்கள் அங்கு தாமும் இருப்பதாகக் கேட்டார்கள். மாந்திரீகன் அவர்களுக்கென விடுதி யொன்று கொடுத்து அதில் இருக்குமாறு கூறினான். அவர்களும் அவ்வாறே அங்கு தங்கிவிட்டுத் தமக்கும் பெண்களுக்கும் ஆகாரம் கொண்டுவரும்படியாகத் தம் மனிதர்களிடம் சொல்லி யனுப்பி விட்டார்கள்.

ஜன்னல் வழியாக இந்த கோரமான காட்சியையெல்லாம் கண்ட திலகவதியின் ஆச்சரியம் எல்லை கடந்துவிட்டது. அந்தப் பெண்களில் ஒவ்வொருத்தியும் வெகு எழில் நிறைந்த நங்கையாக விருக்

விதத்திலும் பேசுவதற்கே கஷ்டமாகிவிடுகிறது. அவர்களுடைய வேதனையைக் கண்டு சகிக்கவும் மிக்க வருத்தமாக விருக்கிறது. உலகத்திலுள்ள எல்லாச் சோதனைகளையும் விட இந்த சோதனை மிக்க துன்பத்தை யளிப்பதாகும்.

ளுள். அவர்களுக்குக் காட்டேரி பிடித்ததும், பிசாசு பிடித்ததும், அவைகள் ஆடுவதும் திலகவதிக்கு நம்பக்கூடாதவிதமாகத் தோற்றுகின்றது. ஒரு சமயம் பயமும் நடுக்குகின்றது. இந்நிலைமையில் தானும் கூச்சலிடுவதென்று முதலில் எண்ணினாள். ஆனால் இங்கு நடப்பதுதான் யாது என்பதை அறியாமல் கூச்சலிடுவதில் உபயோகமில்லை என்று எண்ணி வாளாவிருந்தவாறு கவனித்து வந்தாள்.

திலகவதி மட்டும் அந்த ஜன்னல் வழியாகப் பார்ப்பதை விடவில்லை. இவர்களுடைய பிசாசுகளை எவ்விதம் ஓட்டுகிறான் பார்க்க வேண்டுமென்கிற ஆசை தோன்றியதால், அவ்விதமே பார்த்துக் கொண்டிருந்தாள். இரண்டு வேலைக்காரிகள் வந்து அந்தப் பெண்களின் ஈர உடையை மாற்றிவிட்டு வேறு உடை அணிவித்துச் சென்றார்கள். அப் பெண்கள் தங்கள் ச்மரணையே அற்றவர்கள்போலப் படுத்திருந்தார்கள். தாடி மனிதன் மீண்டும் உள்ளே வந்தான். அந்த அறையின் எதிர்ப் புறமாயுள்ள ஒரு சுவரின் மத்தியில் இருந்த ஒரு விசையை அழுத்தினான். உடனே அந்த சுவரிலிருந்த கதவு திறந்து கொண்டது. அந்த ஆசாமி உள்ளே நுழைந்தான்.

அவ்வறையின் அலங்காரத்தையும், அமைப்பையும் கண்டு திலகவதி வியப்பே வடிவமானாள். அவ்வறையில் சோபாவில் வெகு அட்டகாஸமாய் வீற்றுப் பத்திரிகை படித்துக்கொண்டிருந்த ஒரு மனிதன் இவ்வாளைக் கண்டதும் வெகு உற்சாகத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்தான். உள்ளே நுழைந்தவன் அந்த மனிதனைப் பார்த்து, "எஜமானே! ச்வாமிகளே! இன்றைய தினம் நம்முடைய மந்திரசாலையில் மந்திரத்தினால் கிடைத்த மங்கையர்கள் அதோ, அவர்கள் தான்." என்று காட்டினான்.

கவிகளிடம் பேசினால் அருமையான கவிச்சுவை இன்பத்துடன் பேசுவார்கள். நூலாசிரியருடன் பேசினால் கற்பனையின் கோர்வைகளைப் போலச் சுவையுடன் பேசுவார்கள். சித்திரக்காரர்களுடன் பேசினால் அழகைப்பற்றி வர்ணிப்பதிலேயே கருத்தமைந்து பேசுவார்கள்.

அந்த ஆசாமி இதைக் கேட்டு வெகு சந்தோஷத்துடன் எழுந்து வந்து அவ் வனிதைகளை எல்லாம் உற்றுப் பார்த்தான். அருகில் வந்து அவர்களின் முகத்தைத் தடவியவாறு முத்தமிடப் போனான். இதுவரையில் எல்லாவற்றையும் மவுனமாகப் பார்த்துக் கொண்டு நின்ற திலகவதி இந்த கொடிய அக்ரமச் செய்கையைக் கண்டு மனம் சகியாமல் பதறிப்போய் "ஐயோ! அட பாவிகளே! அக்ரமக்காரக் கர்மிகளே! இவ்வித அநியாயமும் செய்யலாகுமா! இது தர்மமா! பேயை யோட்டுவதாயும், மந்திரிப்பதாயும் அழைத்து வந்த பெண்களை மானபங்கம் செய்வதா மாந்திரீகத்தின் மகிமை! ஐயோ! புனிதமான மந்திரத்திற்கே உங்களைப்போன்ற படுபாவிகளால் ஹானி வந்து விடுமே! ஐயோ! தொடாதே! உத்தமிகளான பெண்களைக் கெடுக்காதே! பெண்களைப் பெற்ற பாவிகளே! இச் சமயம் உங்கள் பெண்களை இக்கிராதகர்களின் வசம்—மோசக்காரர்களின் வசம்—விட்டு விட்டு எங்கே போய் விட்டீர்கள்? ஐயோ! இந்த அனியாயத்தைக் கேட்பவர்கள் எவருமில்லையா!" என்று பலமாகக் கத்தினாள்.

திலகவதியின் கண்களுக்கு அங்கு நடக்கும் காட்சிகள் தெரிகின்றனவே யன்றி அங்கு பேசுவது இங்கோ, அன்றி இவள் பேசுவது அங்கோ காதில் விழாது. ஏனெனில் அவ்விடம் இந்த ஜன்னல் இருக்கும் பாகத்திற்கு தூர விருப்பது ஒன்று. அவ்வறை முற்றும் கண்ணாடியால் செய்யப்பட்டுள்ளது. இந்த பாகங்கள் ஓர் தனித்த விடுதிகளாக அமைக்கப்பட்டிருப்பதால் இதில் காது கேட்பதற்கு ப்ரமேய மில்லாது போயிற்று. எனினும் திலகவதி கூச்சலிட்டது வேறு இடங்களில் நன்றாகக் கேட்டு விட்டது.

உடனே அவளிருக்கும் கதவு பட்டார் என்று திறக்கப்பட்டது. இரண்டு ஆள்கள் உள்ளே நுழைந்தார்கள். திலகவதி ஜன்னலின் அருகில் நின்று பார்ப்பதைக் கண்ட அவர்கள் சீறி விழுந்த

இப்படியே தொழின் முறைகளை யொட்டியே அவரவர்களின் பேச்சுக்களும் வரும். வம்பளக்கும் வீணர்களிடம் தப்பித் தவறிப் பேசும்படியான விதியமைந்து அகப்பட்டுக் கொண்டாலோ "அங்கு அது, இங்கு இது ஆனை ஆகாயத்தில் பறப்பதைக் கண்ணால் கண்டேன். பூனை ஓர் வண்டி

வாறு, "ஓகோ! இந்த அட்டகாஸம் கொஞ்சம் செய்து பார்க்கிறாயா! நாளை உன் கதி வேறு விதமாக முடியப் போகிறது; அதையும் மனத்தில் எண்ணித் தெரிந்து கொள்" என்று கூறியவாறு அவளருகில் நெருங்கினார்கள். இந்த எதிர்பாராத திடும்ப்ரவேசத்தைக் கண்ட திலகவதி சடக்கென்று கீழே இறங்கி நின்றாள்.

அடுத்த விநாடி திலகவதியை அந்த முரடர்கள் ஓர் ஆட்டுக் குட்டியைத் தூக்குவதுபோலத் தூக்கிக் கொண்டு தடதடவென்று படிக்கட்டுகளில் இறங்குவதுபோலத் தோன்றியது. அவள் எத்தனை திமிறியும், உதைத்துக்கொண்டும் கூச்சலிட்டும் பயனற்று விட்டது. படிக்கட்டுக்களின் வழியே இறங்கி ஒரு இடத்திற்குச் சென்று திலகவதியை கீழே விட்டு விட்டு "உன்னை நல்ல வழியில் நடத்துவதற்குக் காலமில்லை. நீ கத்தியதற்கும் தாறுமாறாகக் கூச்ச லிட்டதற்கும் இதுதான் பலன்." என்று கூறி அவ்வறையில் விட்டு விட்டுச் சடாரென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு போய் விட்டார்கள்.

இமை கொட்டும் நேரத்திற்குள் நடந்துவிட்ட இக் காரியத்தினால் திலகவதி அதிக மன அதிர்ச்சி யடைந்துவிட்டாள். இன்னதென்று அறியக் கூடாத திகிலுடன் ஓர் பதுமைபோலச் சற்றுநேரம் அசையாதிருந்தாள். பிறகு சற்று நிதானித்துக்கொண்டு தான் இருக்கும் இடத்தைக் கவனித்தாள். ஓரே இருள் மயமாயும், வெகு நாட்களாகப் பூட்டி வைத்திருக்கும் ஓர் வித நாற்றமும், துரிஞ்சல்களின் சஞ்சாரமும், குப்பையுமாகக் கிடக்கும் அவ்வறையைக் கண்டதே இவளுக்கு கரை புரண்ட துக்கமும், அபாரமான பயமும் ஒன்றுகூடி விட்டன. முன்னிலும் அதிகரித்த பீதியை அடைந்து தத்தளிக்கின்றாள். அவ்வறையின் மேல் பாகத்திலுள்ள சிறிய இரு கண்ணாடித் துவாரங்களிலிருந்து ஒரு சிறு வெளிச்சம் தெரிகிறதே யன்றி அதனால் வேறு எவ்விதமான உபயோகமும் காணப்பட

இழுத்தது. அவர்கள் கெட்டவர்கள், இவர்கள் இத்தகையோர்கள் என்றது போன்ற மணிப்ரவாளமான அழகிய சொற்களைத்தான் கேட்கலாம். அதைக் கேட்கும்போது வம்பில் நாட்டமற்றோரின் மனம் எப்படித்தானிருக்கும்?

ஸ்ரீமதி

வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய நாவல்கள்.

					"ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை		
வைதேகி (2-பாகங்கள்)	2	8	0	...	2	0	0
பத்மசுந்தரன் (2-பாகங்கள்)	2	8	0	...	2	0	0
ராதாமணி (2-பாகங்கள்)	2	8	0	....	2	0	0
சாருலோசனா (2-பாகங்கள்)	2	8	0	....	2	0	0
நவநீதகிருஷ்ணன்	2	0	0	....	1	12	0
ருக்மிணிகாந்தன்	2	0	0	....	1	12	0
சாமளநாதன்	2	0	0	...	1	12	0
சண்பகவிஜயம்	1	12	0	....	1	8	0
கௌரீமுகுந்தன்	1	12	0	....	1	8	0
ஸாரமதி	1	12	0	....	1	8	0
சோதனையின் கொடுமை	1	8	0	....	1	4	0
பரிமளகேசவன்	1	4	0	....	1	0	0
உத்தமசீலன்	1	4	0	....	1	0	0
சுகந்தபுஷ்பம்	1	0	0	...	0	14	0
கதம்பமாலை	1	0	0	....	0	14	0
கோபாலரத்னம்	0	14	0	....	0	12	0
நளினசேகரன்	0	8	0	...	0	6	0
வீரவஸந்தா	0	8	0	...	0	6	0
மூன்று வைரங்கள்	0	8	0	...	0	6	0

ரூ. 20-8-0 முன்பண மனுப்புவோருக்கு மேற்கண்ட 19 நாவல்களையும் தபாற் செலவின்றி அனுப்புவோம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

The Kabeer Printing Works, Triplicane.

பத்தாவதாண்டு! பிறந்துவிட்டது!!

வருட சந்தா ரூ. 1 8 0 மாதிரிப் பிரதி இனும்!

"ஜகன் மோகினி"

இவ்வாண்டில் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய காதலின் கனி எனும் அற்புதமான துப்பறியும் நாவல் அனேக அனுபவ நீதி சாரங்களுடன் வெளிவருகின்றது. இக்கதை முடிந்ததும், மற்றொரு நாவல் வெளிவரும். வருஷம் முடிந்ததும் இவ்விரண்டு நாவல்களும் ரூ. 3 க்கு விற்கப்படுமாதலால் இப்பொழுதே சந்தாதாரராய்ச் சேர்ந்து விடுவதால் குறைந்த விலையில் நிறைந்த பக்கங்களையுடைய நாவல்களை யடைவதுடன் மேற்படி நூலாசிரியை எழுதிய இதர நாவல்களையும் மறு பக்கத்தில் கண்டுள்ள குறைந்த விலைக்கு வாங்கிக்கொள்ளலா மென்பதைக் கவனிக்கவும். மேலும் பரிசுப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.

நமக்குத் தெரிந்த வரையில்

தமிழ்ப் பத்திரிகையுலகில் இதுவரை

நடைபெறாத சம்பவம்

இனும் முற்றிலும் இனும்

இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்படும் நாவல்கள்

நமது

ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனும்

இதர சஞ்சிகைகளைப் போல நாமும் ஜீவிய சந்தா ஏற்படுத்த வேண்டுமென்று அநேகர் கோருவதால், ரூ. 25 முன்பண மனுப்புகிறவர்களை நமது ஜீவிய சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்வதுடன், இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களையும் இனமாக அனுப்புவோம்.

"ஜகன் மோகினி" ஆபீஸ்,

திருவல்லிக்கேணி, சென்னை.

வில்லை. தான் நிற்பதற்கும் அருவருப்புள்ள இவ்விடத்தைப் பார்க்கவும் பிடித்தமின்றி சிறிது நேரம் சுற்றி அலைந்தாள். கண்ணீர் விட்டுக் கதறினாள். கலக்கத்துடன் சோர்ந்து விட்டாள். அன்றைய தினம் அவளுக்கு ஆகாரமும் வரவில்லை. தன் முந்தாணையினால் அங்கு கீழே தட்டி விட்டு அதையே விரித்துப் படுத்தாள். அவளை விசனமாகிய கவசம் வந்து மூடிக் கொண்டது.

*   *   *   *   *

நம்முடைய துப்பறியும் சிங்கமாகிய நாயுடு அன்று முதல் அங்கச்சியம்மாளையும், சோமுவையும் வெகு கவனமாக அவர்களறியாதவாறு கவனித்துக்கொண்டு வந்தார். அங்கச்சியம்மாளும் குடுகுடுப்பைக்காரனும் பேசிய விஷயங்களும் அவளை சுகுமாரன் பின் தொடர்ந்ததும்; அம்மனிதன் ச்மசானத்தில் நுழைந்தான் என்றும் கேட்ட விஷயங்கள் நாயுடுவின் மனத்தில் நன்கு பதிந்திருந்தன. அதோடு சோமுவுக்குத் திலகவதியை மணம் செய்விக்க அங்கச்சியம்மாள் ஏற்பாடு செய்த விஷயம் திலகவதி சுகுமாரனிடம் தெரிவித்ததை சுகுமாரன் நாயுடுவிடம் தெரிவித்திருந்தமையால் அவ்விஷயமும் அவர் மனத்தில் பதிந்து கிடந்தது. இவ்விரு விஷயங்களையும் உத்தேசித்து இரண்டு பேர்களையும் கவனிக்கவாரம்பித்தார்.

சோமு அறியாதபடி அவன் செல்லுமிடத்திற்கெல்லாம் தன் ஆட்களை யனுப்பி இடத்தை அறியச் செய்திருந்தார். ஆதலால் சோமு இந்த இடத்திற்கு வருவதை நாயுடு எளிதில் கண்டு கொண்டார். "வெளியிலிருந்து பார்ப்பதற்கு மிகவும் பெரிய மனிதர்கள், அரசர்கள் முதலியவர்கள் வசிக்கத்தக்க விடத்தில் இவனுக்கு என்ன வேலை?" என்ற பெரிய யோசனை அவருக்கு உண்டாகியது. ஆதலால் தானே அன்று முதல் கவனிக்கக் கிளம்பினார். வீதிப்

சங்கீதத்தைப்பற்றி அதன் அருமை தெரிந்தவர்களிடம் பேசும்போது தேவாம்ருதம் புசிப்பதற்கு மேலான இன்பமே அளிக்கின்றது. அத்தகைய சங்கீதத்தை அழகாகப் பாடுகையில் கேட்டால் நம்மையும் உலகத்தையுமே மறந்துவிடுகிறோம். இவ்விரண்டிற்கும் ப்ரதிகூலமாக

புறமும் பெரிய தோட்டம் முதலியன இருக்கின்றன. புறக்கடைப் புறமும் இருக்கிறதாகையினல் வீதிப்பக்கத்துத் தோட்டத்தில் வந்தார்.

அங்கிருந்த காவல்காரன் அவரை உள்ளே விடுவதற்கு மறுத்துவிட்டான். நாயுடு உள்ளே யார் இருக்கிறார்கள், என்ன விஷயம் என்பதை ஜாடையாக அறியும் பொருட்டு எத்தனையோ விதமாகக் கேட்டுப் பார்த்ததெல்லாம் பயனற்றுவிட்டது. தான் அதற்குமேல் பலவந்தமாகக் கேட்டால் அவனுக்கு அதனல் சந்தே கம் ஏற்படும் என்று எண்ணிப் பேசாது போய்விட்டார். வீதியி லேயே நின்று கவனித்து வந்தார். அப்போது சில பெண்கள் மஞ்ச ளாடையணிந்து கையில் வெள்ளித் தடியும் வேப்பிலையுமாக இந்த பங்களாவின் உள்ளே செல்வதை நாயுடு கண்டார். அவருக்கு ஆச்சரியமாகி விட்டது. “இங்கு இவர்கள் செல்வதைப் பார்த்தால் மந்திரவாதி இருப்பிடம் போலத் தோன்றுகின்றது. ஆகட்டும்; இதற்குச் சரியான வழி பிறகு செய்வோம்.” என்று எண்ணியவராய் வீட்டிற்கு வந்துவிட்டார்.

மறுநாள் நாயுடு தன் ஆளுக்குச் சகலமான விஷயங்களையும் உபதேசம் செய்துவிட்டு, அவனுக்குப் பெண் வேடத்தைத் தரிக்கச் செய்து அவனை யழைத்துக்கொண்டு, அவ்விடத்திற்கு அரை மைல் தூரத்திற்கு முன்பே வண்டியை விட்டு இறங்கி அது முதல் தங்கள் நாடகத்தை நடிக்க வாரம்பித்தார். “ஐயோ! மகளே! என் செல்வ மகளே! எங்க தங்கக் கிளியே! உன்னை எப்படியடி அந்தப் பாழும் பிசாசு பிடித்துக் கொண்டது. எங் குடியைக் கெடுக்க அந்த சண் டாளப் பிசாசு எங்கிருந்தடீ வந்தது? ஐயோ! ஆறு மாசம் பிள்ளைத் தாச்சியாயிற்றே! என் கண்மணி சாதத்தைக் கண்ணால் பார்த்து ஆறு மாதமாயிற்றே! ஐயோ! என் குழந்தைக்கன்றோ கோடிப் பணம்

ஓர் அபஸ்வரக் குடுக்கையைப் பாடவைத்துவிட்டுக் கேட்கவேண்டுமென் றால், அவர்களுடன் பேசவேண்டுமென்றால் எவ்விதந்தான் பொறுமையை உண்டாக்கிக்கொள்ள முடியும்? இந்த அம்சத்தில் லோகம் புகழும் உத்தம ரான காந்தியடிகள்கூடப் பொறுமையைச் சற்று இழந்து ஒரு சிறு நகைப்

சேர்த்தேன். சகல கல்வியும் சொல்லிக் கொடுத்தேன். கடைசியில் எல்லாவற்றையும்—என் மகளையும்—சேர்த்துப் பிசாசினிடம் பறி கொடுக்கும்படியாகவா என் விதி யாயிற்று. ஐயோ! யாரோ புண்ணியவான் ஒருவர் மந்திரிக்கின்றாராமே! அவருடைய இடம் தெரியவில்லையே! அவரைக் காட்டி உதவும் தர்மாத்மாக்கள் ஒருவருமில்லையா! என் வயிற்றில் பாலை வார்க்கும் புண்ணியாத்மாக்கள் யாருமில்லையா!...ஐயா!...உங்களுக்குப் புண்ணியமுண்டு. யாரோ ஒரு மந்திரவாதி இங்கு அருகில் இருக்கிறதாகக் கேள்விப் பட்டோம். அவர் வீடு எங்கே தயவு செய்து சொல்லுங்களேன்;...அம்மா!.... தாயே!...இங்கு யாரோ மந்திரவாதி இருக்கிறாராமே! சற்று சொல்லுங்கள். உங்களுக்கு ஒரு குடும்பத்தைக் காப்பாற்றி உயிர்ப் பிச்சை யளித்த புண்ணியமுண்டு. ஐயோ! அடி என் தங்கக் கொடியே! என்ன செய்வேனடீ! என் மனம் பதைக்கிறதே! உன்னைப் பெற்ற காலத்திலும், வளர்த்த காலத்திலும் நான் என்னென்னவோ எண்ணி மனக் கோட்டை கட்டினேனே! என்னுடைய கோட்டை முற்றும் பொடியாகி விடும்போலிருக்கிறதே! கடவுளே! அந்த மந்திரக்காரனைக் காட்டமாட்டாயா!'' என்று கூச்சலிட்டுத் தெருவிலெல்லாம் புலம்பிக் கொண்டும், வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டும் இருவரும் உண்மையில் தள்ளாடித் திரிப்பவர்களைப் போலச் செல்கிறார்கள்.

2/0044.

வழியில் போகும், வரும் ஜனங்கள் எல்லாம் இவர்களின் பரிதாபமான புலம்பலைக் கண்டு மிக்க வருத்தமுற்றார்கள் சிலபேர் விசாரித்து "ஐயோ! பாவம்!" என்று ஓத்து பாடுபவர்களும், இடம் தெரிய வில்லையே! என்ன செய்வேன்?" என்பவரும் அவர்களோடுகூட கண்ணைத் துடைப்பவரும், மூக்கைச் சிந்துபவருமாக வீதியில் கூட்டங் கூடிவிட்டது. அச்சமயம் ஷோக்கான மோட்டார்கார் அதி வேகமாக அங்கு வந்து கொண்டிருந்தது.

பேனும் கொள்ளாமலிருக்க முடியுமா என்றுதான் சந்தேகமாயிருக்கின்றது. இந்த அழகான சங்கீதத்தைக் கேட்கவில்லை என்கிற புகாரோ கூறவேண்டாம். தன் வீட்டு விளக்காயின் மட்டும் சுடாதா!

எப்போதும் எங்கெந்த விஷயத்தில் யாருக்கு நாட்டமோ, கவனமோ! அந்த விஷயத்தில்தான் அவர்களின் விழியும், மனமும் செல்லும். சித்திரக்காரன் ஒரு இடத்திற்குச் சென்ருல் அவன் "எங்கு என்ன சித்திர வேலை இருக்கிறது? எது இயற்கை யழகாக இருக்கிறது? எதை எழுதலாம்?'' என்று மனம் தாவி நிற்பான். சமயல்காரன் எந்த பதார்த்தத்தைப் பார்த்தாலும் 'இது எப்படிச் செய்திருக்கிறது. இன்னும் எங்கெந்த மாதிரி புதியதாகச் செய்யலாம்?' என்ற விஷயத்திலேயே இருப்பான். சங்கீதப் பிரியர்கள்—பாடும் சக்தி பெற்றவர்கள்—சங்கீதங் கேட்டால் அதில் 'எந்த பிடிப்பு அருமையாக விருக்கிறது. எப்படிப் பிடித்தால் சுகமாகவிருக்கும்?' என்ற விஷயத்தையே ஆராய்வார்கள். கைவேலைகள் தெரிந்த பெண்மணிகள் 'எந்த விடத்தில் எந்த அழகிய வேலை செய்திருக்கிறது?' என்பதையே கவனித்து மனத்திடைப் பதிப்பார்கள். பத்திரிகாசிரியர்கள், நாவலாசிரியர்கள் எந்த விடத்திற்குச் சென்ருலும் தமக்கு 'ஒரு துரும்பு போன்ற விஷயம் எது அகப்படும். யார் யார் எப்படி நடக்கிருர்கள். யார் யாருடைய குடும்பத்தில் அதிசயிக்கத்தக்க விஷயங்களிருக்கின்றன? யார் யார் குணம் எவ்விதமிருக்கிறது?'' என்பன போன்ற பல்விதமான விஷயங்களைக் கவனித்து அப்போதே அவைகளுக்குக் கண், மூக்கு முதலிய அங்கங்களை சிருஷ்டித்துத் தங்கள் மனத்திலேயே அதையோர் உருவமாக்கிக் கொண்டு பிறகு பரிமளிக்கச் செய்துவிடுவார்கள்.

படிப்பதன்மீதே ஆவலுள்ளவர்கள் எந்தவிடத்திற்குச் சென்ருலும் தங்களுக்குப் படிக்க என்ன கிடைக்கும் என்று கண்ணுல் ஆராய்ந்து அதைச் சுருட்டிக்கொண்டு போவதிலேயே கருத்தாக விருப்பார்கள். அலங்காரப் பிரியர்களும் நாகரிகப் பேர்வழிகளும், எங்கு சென்ருலும் 'யார் யார் என்ன புதிய தினுசு நகைகள் செய்

சிலர் தம் மனத்தில் தான் ஓர் சிறிய பெண் என்று எண்ணிக் கொண்டு அதற்குத் தக்கபடி அலங்காரங்களைச் செய்துகொண்டு குலுக்குகிருர்கள்; மனத்திற் குள்ளே மட்டும் அவ்வெண்ணம் பலிக்குமே யன்றி மேற் பார்வைக்கு தேகம் கட்டு தளர்ந்து, கன்னம் குழைந்து, முகத்தில் சுருக்கம் உண்டாகி, தலை நரைத்து இன்னும் இதற்குத் துணையான சகல

திருக்கிறார்கள், என்ன புதிய மாதிரி சேலை கட்டியிருக்கிறார்கள். என்ன கைவேலைகள் செய்திருக்கிறார்கள். எவ்விதம் அலங்காரம் செய்திருக்கிறார்கள்?'' என்பதையே கவனித்துப் பேசி விசாரித்து உடனே அவைகளைத் தாமும் செய்து அணிந்தாலொழிய நித்திரை செய்யார்கள். இத்தகைய தர்மதேவதைகள் அனேகரிருப்பதனால்தான் தட்டார்களுக்கும், ஸில்கு வியாபாரிகளுக்கும் ஒரு தினங்கூட குறையாத செல்வம் பொங்கிக்கொண்டே இருக்கிறது. இந்த தீவிர புத்தியும், ஆசையும், பரபரப்பும் தேசவேலையிலும் சுதேசி, கத்தர் முதலியவைகளிலும் செலுத்தினால் எத்தனை மேன்மையாக விருக்கும்? தேசத்தின் நிலைமை எவ்வளவு அழகாகச் செழிக்கும். இந்த நிலை என்று எல்லா ஸ்திரீகளிடத்திலும் காணும் பாக்கியம் கிடைக்குமோ தெரியவில்லை.

வம்புக்காரர்கள் எங்கு சென்றாலும் அவர்களுடைய வேலைக்குச் சரியானபடி விஷயம் சேகரிக்கவும், அவர்களுக்கும் இவர்களுக்கும் முடி போட்டுக் குண்டுணி செய்வதற்கும், கலகத் தீ மூட்டி வேடிக்கை பார்த்து மத்தியில் அகப்பட்டதை விழுங்கி ஏப்பம் விடுவதும் பிறகு செருப்படிச் சிங்காரத்திற்குத் தயாராவதுமான வழியைத் தேடுவார்கள். கள்ளபுத்தியுள்ளவர்களோ, 'எந்தப் பொருளை யார் வைத்து ஏமாறுகிறார்கள். எந்த பக்கம் எது கிடக்கிறது.எப்படி அமுக்கிவிடலாம்?' என்றதிலேயே விழியைச் செலுத்தித் திருட்டுப் பார்வையும் திருட்டுச் சிரிப்பும், தலை சொறியலும் வெகு விநோதமாகச் செய்துகொண்டிருப்பார்கள்.

இதே போல இன்ஷியூரன்ஸ் ஏஜெண்டுக்கள், மற்ற வியாபாரத்தின் ஏஜெண்டுகள் இவர்களெல்லாம் தங்கள் காரியம் ஆவதையே முன்னிட்டு எல்லோரிடமும் பேசுவார்கள். இவ்விதம் உலகத்தில் அனந்தம் நடக்கின்றன. அவைகளுக்கோர் எல்லையே இல்லை.

மும் சேர்ந்து விடுகின்றன. தலை மயிருக்கு வேண்டுமானால் சாயத்தைப் பூசிக் கொள்ளலாம் கன்னக் குழியடைப்பதற்கு எதையடைக்க முடியும்? எந்த விஷயத்தையும் முதலில் தன் மனத்திலறியவேண்டும். அதின்றி சிங்காரிப்பதில் என்ன உபயோகம்?

அதே போல தற்சமயம் நமது நாயுடு "வீதியில் யார் செல்கிறூர்கள்? தனக்கு அனுகூலம் கிடைக்கக் கூடிய மார்க்கமோ, மனிதர்களோ கிடைப்பார்களா!" என்றதையே எதிர்பார்த்தபடி தன் நடிப்பை நடித்துக் கொண்டிருந்தார்.

இச் சமயத்தில் இன்னொரு விஷயம் முக்யமாக நினைவிற்கு வருகிறது. சிலர் வீட்டில் அசந்தர்ப்பம் நேர்ந்து விட்டால், அதில் முக்கியமாக சில பெண்கள் ஒப்பாரி வைத்துப் புலம்புவதற்கென்றே வெகு துக்கத்துடன் இருப்பதாகக் காட்டிக் கொண்டு அதற்கென்றே ஆஜராக விருப்பார்களாம். சாவு விசாரிப்பதற்காக வரும் மனிதர்கள் அவர்களுடன் கூடிக் கட்டி யழுகையில் முன் கூறிய ஒப்பாரிக் கர்த்தர்கள் வாயில் என்னவோ ஒப்பாரி பாட்டுப் பாடிக் கொண்டே இருப்பார்களாம். கண்ணாலும், மூக்காலும் தண்ணீர் வழிந்தாலும், வழியாவிடினும் துடைத்தும் சிந்தியும் செய்து அவைகளைச் சிவக்கச் செய்து கொள்வார்களாம்.

அதோடு உட்கார்ந்து புலம்பிக் கொண்டே இருக்கையில் "யார் யார் வருகிறூர்கள்? யார் யார் போகிறூர்கள்? சாவு தடபுடலில் யார் எதை அமுக்கி விடுகிறூர்கள்?" என்றதை யறிய அடிக்கடி தலையை நிமிர்ந்து நிமிர்ந்து, விழிகளைத் திறந்து பார்த்துக் கொண்டே இருப்பார்களாம். இதுதான் அந்த ஒப்பாரிக் கர்த்தர்களுடைய முக்யமான வேலையாம். இதைவிட ஒரு வேடிக்கையான விஷயம் பெரியோர் கூறக் கேட்டதுண்டு. அதாவது ஒரு வீட்டில் முக்யஸ்தர் இறந்துவிட்டதாயும், அதற்கு எதிர் வீட்டு, பக்கத்து வீட்டு அம்மாமார்கள் துக்கம் விசாரிக்க வந்ததாயும், அப்போது வீதியில் புடலஞ் செடி வெகு அழகாகப் படர்ந்து நிறைய காய்களைத் தாங்கி நின்றதாயும், வந்தவர்கள் அதைப் பார்த்து அதன்மேல் மனம் லயித்து உள்ளே சென்று நால்வரும் புலம்புகையில் முதல் வீட்டு அம்மாள்,

---

எட்டு மணிக் கெல்லாம் போஜனம் செய்ய வேண்டு மென்று காலையில் எவ்விதமான ஆகாரமும் புசிக்காமலிருப்பது. எட்டு மணிக்கு இலை போட்டாயிற்று என்று சொல்லும் சமயம் யாரேனும் வந்து இரவல் கேட்கும் வெகு முக்கியமான காரியத்தைப் பற்றி இரண்டு மணி நேரம்

"புடலங்காய் காய்த்திருக்கே என்னம்மாடீ! என் செல்லமடீ!" என்று ஆரம்பித்ததாயும், உடனே மற்றொருத்தி "அப்போதே பார்த்தேண்டீ! என்னம்மாடீ! ஆசையும் அதில் தாண்டீ! என் செல்லமடீ!" என்று பாடியதாயும், வேறொருத்தி "பேசாமல் இருங் கோடீ! என்னம்மாடீ! போகச்சே பறிக்கலாமடீ! என் செல்லமடீ! என்று பாடியதாயும், பின்னொருத்தி "சாவு வீட்டில் சந்தடியதிகமடீ! என்னம்மாடீ! ஆளுக் கொன்றாகப் பறித்துக் கொள்ளலாமடீ! என் செல்லமடீ! என்று பாடியதாயும், இவைகளை எல்லாம் வீட்டுத் தலைவி கேட்டுக்கொண்டிருந்ததால் அவளுக்கு ஆத்திரம் பொங்கி "ஐயோ! அம்மாடீ! என் மகளே! உன் சடலம் போனாலும் என்னம்மா! நீ பயிரிட்ட புடலங்காயை வளர்க்கிறேண்டீ! என் செல்லமே! அடுத்த வீட்டு முண்டைக்கும், எதிர் வீட்டு முண் டைக்கும் காட்டிக் கொடுக்க மாட்டேண்டீ! என் கிளியே! உன் கர்மாதிக்கு என்னம்மாடீ! நீ வைத்த புடலங்காயே சமைக்கிறேண்டி! என் செல்லமடீ!" என்று கதறி யழுது "பட்டார்! பட்டார்!' என்று அடித்துக் கொண்டாளாம்.

இதைக் கேட்ட மேல்படியாசாமிகள் "ஐயோ! இந்தப் பாவிக்கு மகள் பிணமாகக் கிடக்கும்போதும் துக்கமிருக்கிறதா, பார்த்தாயா! நாம் சொல்லியதைக் கவனித்துவிட்டாளே!" என்று எண்ணி வெட்கி வீடு சேர்ந்தார்கள்" என்று கூறக்கேட்டதுண்டு. உண்மையில் எத் தகைய துக்கமிருப்பினும், தலையைத் தூக்கிப் பார்ப்பதும், தாமே யறிந்து பதில் பேசிவிடுவதும் யார் யார் வந்திருக்கிறார்கள் என்ப தைக் கவனிக்கவும் செய்வது வெகு வேடிக்கையான விஷயம். அதேபோல நாயுடுகாரு தான் பெருங்குரல் பாய்ச்சிப் புலம்புவ தைச் சற்றும் விடவில்லை. கண்ணோ மனிதர்களையே ஆராய்கின்றது. காதோ யார் என்ன பேசுகிறார்கள் என்பதையே கவனிக்கின்றது.

பீடிகை போட்டுப் புத்தகத்தையும் அடித்துக் கொண்டு எட்டு மணிச் சாப் பாட்டில் மண்ணைப் போட்டு விட்டுப் பத்து மணிக்குச் செல்கிறார்கள். இவர்களால் அடைந்த லாபம் புத்தகம் பறிபோனதும் பட்டினியால் வயிறு சண்டுவதும் தான்!

இத்தகைய திருநடன நாயுடு அங்கு செல்லும் மோட்டார் காரைக் கவனித்தார். பாம்புக்குக் காது சூக்ஷ்மம்போல இவருக்குக் கண் வெகு கூர்மை யாதலால் அந்த காரில் யார் வருகிருர்கள் என்பதை நொடியில் கண்டு கொண்டார். அதில் வருவது சோமு தான் என்பது தெரிந்த உடனே அவர் தலை கால் தெரியாத துக்கத் தால் அலறி யழுபவர்போல் வண்டி போகும் பாதையில் குறுக்கிட் டுக் கதறியவாறு வண்டி செல்லாவண்ணம் தடையாக நின்ருர். வீதி யில் வேடிக்கை பார்க்கும் கூட்டத்தைக் கேட்கவேண்டுமா! இந்த கூட்டமும், பெரிய புலம்பலும் ஒன்ருக விருந்ததைக் கண்டு மோட் டார் அப்படியே நின்றது.

நாயுடுவும் அவருடைய ஆளும் "ஐயா! தர்ம துரையே! எங்கள் குடியின் விளக்கை ஏத்தி வைத்த புண்ணியம் தங்களுக்கு உண்டு. இங்கு எங்கேயோ ஒரு மந்திரவாதியின் வீடு இருக்கிறதாமே! அது எங்கே சற்று கூறுங்களே! நாங்களோ அயலூரு! இந்த ஊரிலேயே இருப்பவர்களைக் கேட்டால் யாரும் சரியாகப் பதில் சொல்லவில் லையே! தங்களைப் பார்த்தால் பெரிய கனவான் போல விருக்கிறீர் களே! சற்று கூறுங்களேன்! வண்டியில் கூட உட்கார்ந்திருந்த அங் கச்சியம்மாளை நோக்கி "தாயே, என் மகளுக்குப் பிசாசு பிடித்து ஆட்டி வதைக்கிறது. அவள் சாதாரண மனுஷி இல்லை. ஆறு மாத கர்ப்பவதி. அவளுடைய உயிரைக் காப்பாற்றவேண்டும். எங்கள் வயிற்றில் பாலை வார்க்கவேண்டும். அந்த குழந்தைக்கு நாங்கள் செய் யாத வைத்தியமில்லை. செய்யாத மந்திரமில்லை. ஒன்றும் பலிக்க வில்லை. வயிற்றிலிருக்கும் சிசுவையும், தாயையும் இன்னும் இரண்டு நாளில் விழுங்கிவிடுவேன் என்று அந்த பிசாசு இரண்டு நாட்களாக அமர்க்களம் செய்கிறது. யாரோ புண்யாத்மாக்கள் இந்தப் பக்கம் ஓர் உயர்ந்த மந்திரவாதி இருப்பதாகக் கூறினர்கள். அதற்காகத்

சிலர் விளம்பரத்தைக் கண்டு ஏமாறுவதில் சமர்த்தர்கள். இவ் விஷ யத்தில் புத்தகங்களாயின் வாங்கிப் படித்தபிறகே தெரிகிறது. கிராம போன் ரிகார்டில் கூட அவ்விதம் ஏமாறுவது பெரிய வேடிக்கை. உபயோக மற்ற பாட்டின் விளம்பரத்தைக் கண்டு அதை வாங்கி விடுவதும் பிறகு வருந்துவதிலும் என்ன பிரயோஜனம்?

தேடிக்கொண்டு வீதி என்ற லஜ்ஜையும் மறந்து, கதறிக்கொண்டு வருகிறோம். சற்று கூறவேண்டும் என்று நாயுடு மனங் கரைந்திரு கும்படி கூறிப் புலம்பினர்.

இந்த கபட நாடக நடிப்பை யறியாத அங்கச்சியம்மாளும், சோமுவும் உண்மையில் மனங் கலங்கினர்கள். சோமு பிசாசு ஆடும் பெண்களைத் தான் பார்க்கவேண்டுமென்று அன்று மந்திரவாதியைக் கேட்டதற்கு இன்றே உத்தரவு கிடைத்ததால் அங்கச்சியம்மாளை யும் அழைத்துக்கொண்டு போய் அந்தப் பெண்கள் ஆடுவதையும், பாடுவதையும் இவர்கள் மந்திரிப்பதையும் பார்த்துக்கொண்டிருந்து பின்னர் வருவதால் இவர்களுக்கும் அந்த இடத்தைக் காட்ட வேண்டுமென்று தயை பிறந்துவிட்டது. உடனே இருவரும் நாயுடு வைக் கண்டு "ஐயா! கிழவரே நீங்கள் இருவரும் இவ்வண்டியிலேயே ஏறிக்கொள்ளுங்கள். நாங்கள் உங்களை அந்த மந்திரவாதியின் வீட்டிலேயே விட்டுவிடுகிறோம்" என்றார்கள்.

இவ்வார்த்தையைக் கேட்ட நாயுடுவின் உள்ளம் பூரித்ததைக் கேட்கவேண்டுமா! இருவரும் சோமுவையும், அங்கச்சியம்மாளையும் இவ்வளவுதான் என்று கரை இல்லாமல் தோத்திரம் செய்து, மோட் டாருடன் அவர்களைச் சுற்றிப் பல வந்தனங்கள் செய்துப் பின் இரு வரும் வண்டியில் அமர்ந்துகொண்டார்கள். வண்டியின் நம்பரும், ட்ரைவரின் உருவமும் அப்போதே நாயுடுவின் மனப்புத்தகத்தில் நன்கு பதிந்துவிட்டன. உடனே வண்டி வந்த வழியே திரும்பிச் செல்ல வாரம்பித்தது.

சில யாசகர்கள் தாங்கள் அண்டியுள்ளவர்களிடம் யாசகம் வாங்குவதற்கு முன்னும், வாங்கிக்கொண்ட பின்னும் அவர்களைத் தோத்திரம் செய்து கோபுரத்தின்மீது தூக்கி வைப்பதும், கும்பிடு போடுவதும், பல்லிளிப்பதும் கணக்கே இல்லை. இரவல் புத்தகம்

சாப்பாட்டை நினைத்தால் 'உடனே சாப்பிடவேண்டும்' என்ற ஆசை யுண்டாகிறதாம். ஸினிமாவை நினைத்தால் உடனே பார்க்க வேண்டு மென்று ஆசை. சிநேகிதர்களை நினைக்கில் அவர்களிடம் பேசிக்களிக்க ஆசை; சங்கீதத்தை நினைக்கின் அதைக் கேட்டு மகிழ ஆசை. இவ்விதமே

பெற வரும் ப்ரமுகர்களும் மேற் குறித்த பாடத்தைத் தலைகீழாகப் பாடம் செய்தவர்களாகவே இருக்கிறார்கள். சிலர் ஜம்பமாக இரவல் பெற்ற புத்தகத்தைப் படித்துவிட்டு "என்ன சார்! இப்புத்தகத்தை நான் மட்டுந்தான் படித்தேன் என்று நினைக்கிறீர்களா! அந்த ஜெமீந்தார், இந்த மிட்டாதார், ஆலான், தோலான், தொந்தியான் முதலிய கனவான்களெல்லாம் படித்துக் கொண்டாடிப் புகழ்ந் தார்கள் சார்!" என்று பெரிய அழுத்தலோடு கூறுகிறார்கள்.

மேல் குறித்த பெரிய மனிதர்கள் எல்லாம் படிக்கவில்லையே என்று வியாபாரிகள் அழுதார்களா! அல்லது அவர்கள் படித்ததனால் வியாபாரிகளின் நஷ்டத்திற்கு ஈடாகி விடுமா! ஒரு புத்தகம் நஷ்ட மாகிப்போனது போனதுதானே என்பதை அந்த இரவல் விழுங் கும் பெரிய மனிதர்கள் கவனிப்பதில்லை. தோத்திரம் செய்து விடு வதே நஷ்ட ஈடு என்று நினைத்து விடுகிறார்கள் போலும்.

நாயுடுகாரு வண்டியில் ஏறி உட்கார்ந்த பின்னும் அவர்களைப் பற்றித் தோத்திரம் செய்வதை விடவே இல்லை. சோமுவுக்கும் அங்கச்சியம்மாளுக்கும் உச்சி பிளந்து விட்டது. "ஐயோ! பாவம்!" என்று அனுதாப வார்த்தைகள் பேச வாரம்பித்து விட்டார்கள். அவர்களிடம் பேச்சுக் கொடுத்தபடியே அவ்விடத்தை யடைந் தார்கள். சோமுவும் அங்கச்சியம்மாளும் கூட இறங்கி அங்கிருந்த ஓர் தடித்த ஆளை நோக்கி, "ஐயா! இவர்களுக்கு உங்களுடைய மந்தி ரப் பிரதாபத்தைப் பற்றி யாரோ கூறினார்களாம். உங்கள் இடம் தெரியாமல் தெருவெல்லாம் புலம்பிக் கொண்டே வந்தார்கள். பரி தாபகரமாக விருந்தது. எங்களுக்கு இடம் தெரியுமாதலால் அழைத்து வந்தோம். இவர்களின் மகளுக்குப் பிசாசு பிடித்திருக் கிறதாம். கர்ப்பவதியான அப்பெண்ணை இன்னும் இரண்டு நாட்களில் விழுங்கி விடுவேன் என்கிறதாம். நீங்கள் தயவு செய்து அவர்களது பெண்ணைக் காப்பாற்றிக் கொடுக்க வேண்டும்.

இம் மனம் தொத்துக் கிளிபோல தாவித் தொத்திக் கொண்டே இருக் கும். இதற்கு ஓய்வும் உண்டா?......ஆம்; உண்டு......எப்போது......சவ மான பிறகு நிம்மதியான ஓய்வேதான்.

நாங்கள் வருகிறோம். ஐயா! இவர் உங்கள் பெண்ணுக்குக் குண மாக்கி விடுவார். பயப்படாதீர்கள்.'' என்று நாயுடுவினிடம் கூறி விட்டு இருவரும் போய்விட்டார்கள்.

நாயுடு அந்த மனிதனின் இரு கைகளையும் பிடித்துக் கொண் டார். அவருடைய ஆள் இரு கால்களிலும் விழுவது போல மண்டி யிட்டான். இருவருமாகச் சேர்ந்து பெருங் குரல் பாய்ச்சி ஹோ வென்று புலம்பியபடியே "ஐயா! தர்ம தேவதையே! எங்கள் குடியின் விளக்கை ஏற்ற வேண்டும். என் மகளுக்கு உயிர்ப் பிச்சை தாங்கள் தான் கொடுக்க வேண்டும். தவமான தவம் செய்துப் பெற் றோம். அந்தக் குழந்தையை கிளியை வளர்ப்பது போல எங்கள் கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்தோம். ஆறு மாதம் கர்ப்ப வதியா யிருக்கையில் இப் பாழும் பிசாசு எங்கிருந்தோ என் குடி யைக் கெடுக்க வந்தது.'' என்று பெரிய ஒப்பாரி வைத்துப் பாடி கெஞ்சிக் கேட்டார்கள்.

இவர்கள் செய்யும் அமர்க்களத்தையும், தடபுடலையும் பார்த்து அந்த ஆசாமியும் சற்று ப்ரமித்து விட்டான். "சரி. உங்கள் பெண் ணுக்கு எத்தனை நாளாகப் பிசாசு பிடித்திருக்கிறது. அவள் என் னென்ன செய்கிறாள்? விவரங்களைக் கூறுங்கள்'' என்றான்.

நாயுடு :—ஐயா: அந்தக் கொழந்தை மாமியார் வீட்டிலிருந் தது; அவள் கர்ப்பமாகவிருக்கிறாள் என்ற செய்தி வந்தது. நாங்கள் அழைத்து வருவதற்காக நாள் பார்த்துக் கொண்டு போனோம். ஐயோ! என்ன சொல்வேன்? அச்சமயம் தான் என் மகள் மூச்சு பேச்சில்லாமல் கிடப்பதை அறிந்தோம். அன்று முதல் தினம் இப் படித் தான் இருக்கிறது. பார்க்காத மந்திரமில்லை; பார்க்காத வைத் தியமில்லை. ஒன்றும் பலனில்லை. சதா அழுகிறாள். சில சமயம் சிரிக்கிறாள். கோபமாக எல்லோரையும் அடிக்கிறாள்; பயம் பயம் என்று நடுங்குகிறாள். கட்டை போலப் படுத்து விடுகிறாள்; எதிர்த்து

உண்மையான காதல் கயிற்றில் கட்டுப் பட்டவர்கள் ஒருவரை யொரு வர் ஒரு தினம் பாராவிடில் உயிர் போய்விடும் படியான அவஸ்தைப் படுகிறார்களாம். அச்சமயத்தில் அவர்கள் எவ்விதமேனும் சந்திக்க

எதிர்த்துப் பேசி வாயாடுகிறுள். ஒரு வேளை பத்து படி அரிசி வடித்துக் கொட்டினாலும் தின்கிறுள். சில தினம் பட்டினியே கிடக்கிறுள். எங்கள் மனம் எப்படி இருக்கும் பாருங்கள்; ஐயோ! தாங்கள் எப்போது மந்திரிக்கிறீர்கள்? என்று என் மகளுக்குக் குணமுண்டாகும்?

மந்திரவாதி :—சரி. இப்போது ஒரு விபூதி தருகிறேன்; இதைக்கொண்டு அவள் மீது போட்டு நெத்தியில் இடுங்கள்; அதன் பிறகு இங்கு அழைத்துக் கொண்டு வாருங்கள்.—என்று கூறி விபூதியைக் கொடுத்தான்.

நாயுடு அதை வெகு மரியாதையுடன் பெற்றுக்கொண்டு "ஐயா! உங்களுக்கு மிகவும் புண்ணிய முண்டு. நாளைக்குக் காலையில் அழைத்துக் கொண்டு வரட்டுமா?" என்று கேட்டார். அவன் அதற்கு இணங்கினன். உடனே நாயுடு அவனிடம் விடைபெற்றுக்கொண்டு தன் கடைக்கண்ணால் அந்த கட்டிட அமைப்பை நன்கு கவனித்துக்கொண்டார். தான் நடிப்பதை உண்மையென்றே நினைக்கும் பொருட்டு அவ்விடம் விட்டுச் சற்று தூரம் சென்ருர். பிறகு மீண்டும் ஓட்டமாக ஓடி வந்து "ஐயா! என் குழந்தைக்கு நன்ருகக் குணமாகி விடுமா! நான் தைரியமாகப் போகலாமா!" என்று கேட்டுப் பதில் பெற்றுக்கொண்டு திரும்பவும் வீதிவரையில் சென்று மீண்டும் திரும்பி வந்து "ஐயா! நாளையே மந்திரிப்பீர்களா! என் மகளுக்கு ஒன்றும் பயமில்லையே!" என்ருர்.

இவ்விதமே பல முறை போவதும் வருவதுமாகத்தன் மன உணர்ச்சியைக் காட்டி நடித்துப் பின்னர் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு வந்து சேர்ந்தார். அவருடைய தொழில் முறையில் அவருடன் கூடிப்பழகி வெற்றி கண்டுள்ள நாரீமணியும், கேவலமான தாசி குலத்தில் பிறந்தும் நன்னெறி பிறழாமலும் கற்புக்கரசியாயும் தற்புத்தி கொண்டவர்களையும் நற்புத்தி புகட்டிக் காத்த உத்தமியும்,

---

முயற்சித்துப் பார்த்துவிட்டுத்தான் புசிப்பார்களாம். ஐயோ! இந்த அருமையான காதலர்களைக் கடவுள் ஒன்று சேர்க்காததின் பயனல்லவா மேல்படி திண்டாட்டம்!

நாயுடுவின் அத்யந்த ப்ரீதிக்குப் பாத்திரமாகியவளுமான அம்பு ஜத்தின் வீட்டிற்குச் சென்றார்.

(குறிப்பு. இந்த வனிதா ரத்தினமாகிய அம்புஜத்தின் அற்புத செய்கைகளையும், அபாரமான குணத்தையும், ஆழ்ந்த கருத்துக்களையும், பரோபகாரச் சிந்தையையும், உத்தம லக்ஷணங்களையும், பக்ஷபாத மற்ற தன்மையையும் காண வேண்டுமாயின்—ராதாமணி, ருக்மிணீகாந்தன் ஆகிய இரு துப்பறியும் நாவல்களைப் படித்தால் விஷயம் நன்கறியலாம். இன்னும் அனேக அனுபவ விநோதங்களையும் கற்பனு சக்தி யையும் காணலாம். ராதாமணி விலை ரூபாய் இரண்டரை தான். ருக்மிணீகாந்தன் விலை ரூபாய் இரண்டுதான்.)

அம்புஜம் நாயுடுவின் வரவால் பரம சந்தோஷமடைந்து அவரை வரவேற்றாள். நாயுடுவும் அவளுடன் பேசியாக வேண்டிய விஷயங்களை எல்லாம் பேசி முடித்தார். நங்கையர் மணியும் அடங்கா நகைப்பு கொண்டு நகைத்துப் பின்னர் "அப்பா! இதோ தயாராகக் காத்திருக்கிறேன்." என்றாள். உடனே அம்புஜம் அவள் கணவனோடு பேசி விடை பெற்றுக்கொண்டு நாயுடுவுடன் கூட வந் தாள். இருவரும் நாயுடுவின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள்.

அடுத்த தினம் உதயமாயிற்று. அம்புஜத்தின் ஆபரணங்க ளெல்லாம் கழற்றப்பட்டு அவள் பைசாசம் பிடித்த பெண்ணைப் போலத் தலைவிரிக் கோலமானாள். அவளுக்கே அடங்காத நகைப்பு வருகிறது. "அப்பா! இன்றைய நாடகத்தில் நான் நகைப்பையே முதலாக எடுத்துக் கொள்கிறேன். ஏனெனில் என்னைப் பார்த்தால் எனக்கே வெகு நகைப்பு வருகிறது" என்றாள். பிறகு ஓர் மோட் டார்காரை யமர்த்தி நாயுடு அம்புஜத்தையும் ஸ்திரீ வேடந் தாங்கிய இரு சகாக்களையும் அழைத்துக்கொண்டு தானும் ப்ரயாணமானார்.

சுடச் சுடச் சாப்பிட்டால் ஒரு ருசி. ருசிக்குப் பார்த்தால் சாப்பாடு முடிந்ததும் மூதேவி அம்மாள் (தூக்கம்) விசாரிக்க வந்து விடுகிறாள்; அதனால் வேலைகளுக்குத் தடை உண்டாகிறது. ஆறிய பிறகோ ருசி

தாங்கள் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டும் என்கிற விஷயங்களைப் பற்றியே வண்டியில் பேசிக் கொண்டு போனார்கள். வண்டி நாம் முன் குறித்த வீட்டின் சமீபத்தில் வந்த உடனேயே அம்புஜம் ஹோ! வென்ற பெரிய கூச்சலிட்டவாறு அட்டகாஸம் செய்ய வாரம்பித்தாள். நாயுடுவும் அவர் ஆட்களும் அதற்குத் தகுந்தபடி நட்டுவம் கொட்ட வாரம்பித்தார்கள். அவ் வீட்டு வாசலில் வண்டி நின்றதும் நாயுடுவும் அவர் ஆளும் வெகு ப்ரயாசைப் பட்டு இப் பிசாசு பிடித்த பெண்ணை யழைத்து வருவதுபோல நடித்து அம்புஜத்தை அழைத்துக் கொண்டு போனார்கள்.

அம்புஜம் கையையும் காலையும் திமிறிக் கொண்டு "எண்டா! திருட்டுப் பசங்களா! என்னை இங்கு இழுத்துக்கொண்டு வந்து என்னடா செய்யப் போகிறாய் என்பதை நான் சொல்லட்டுமா! ஹஹ்ஹா! அடேய்! பசங்களா! விடடா! விடடா!" என்று திமிறினாள். இந்த கோஷத்தைக் கேட்டு உள்ளிருந்து இரண்டு ஆள்கள் வந்தார்கள்; பேயாட்டம் ஆடும் அம்புஜத்தைக் கண்டு நகைத்து "ஓ! இந்த மாதிரியான பிசாசுகளை அனேகம் நான் பார்த்திருக்கிறேன். உம். பேசாமல் உள்ளே போ!" என்று அதட்டி வாய் மூடுமுன் அம்புஜம் "ஓஹோ! அடேய்! திருட்டு நாயே! உன்னைப்போல மந்திரவாதிக் கழுதைகளை அனேகம் நான் பார்த்திருக்கிறேண்டா! அஹ்ஹா" ...என்று கூறி அருகிலிருந்த ஓர் கட்டையைத் தூக்கி அந்த மனிதனின்மீது எறிந்தாள். அடுத்த நிமிடம் ஒன்றன்மீது ஒன்றாக தொத்திக்கொண்டே அங்கிருந்த பெரிய சுவர்மீது ஏறி காத்துவாரியைத் தொத்திக்கொண்டு அதன்மீது உட்கார்ந்தாள்.

இச் செய்கை அந்த மந்திரக்காரனையே ப்ரமிக்கச் செய்தது. அவன் வெகு ஆத்திரத்துடன் "ஏய்! கீழே இறங்குகிறாயா, இல்லையா! அங்கிருந்தபடியே உன்னைக் கீழே தள்ளி விடுவேன்." என்று சற்று அதட்டினான். இது கேட்ட அம்புஜம் பெரியதாக நகைத்

அதிகமில்லை. எனினும் வேலைகள் ஆகும் பலன் அதிக மிருக்கிறது. அம்மாள் அவ்வளவாக அணுகுவதுமில்லை. இது காலை வேளைக்கு மட்டுமே! இரவில் எல்லாம் ஒன்றேதான்.

துக்கொண்டே "ஹா ஹா! நீயாடா! என்னைத் தள்ளுகிறவன். ஏதோ தள்ளுகிற மூஞ்சியைப் பாரு. தூத்தூ!" என்று காரி யுமிழ்ந்து விட்டுப் பரபரப்புடன் இன்னும் தொத்தி மேல் பக்கம் மாடியின் வராண்டாவில் தாவி குதித்து அங்கிருந்த ஓர் அறையில் புகுந்து சடக்கென்று கதவைத் தாப்பாளிட்டுக் கொண்டாள். இவ்விடத்தின் அமைப்பைக் கண்டு நாயுடு அம்புஜத்தினிடத்தில் ஏற்கெனவே எல்லாவற்றையும் சொல்லி யிருப்பதால் அவள் வெகு எளிதில் இவ்விதம் செய்து விட்டாள்.

இமை கொட்டும் நேரத்திற்குள் செய்த இச் செய்கையைக் கண்ட மாந்திரீகன் அதிர்ச்சியடைந்து "ஹா! மோசம்! மோசம்!! எஜமானனின் உள்ளே இப் பைசாசம் பதுங்கிவிட்டதே! என்ன செய்வது என்று எண்ணித் தத்தளித்தவாறு நாயுடுவைக் கீழேயே விடுத்து தான் மட்டும் மெத்தையை நோக்கி ஓடினன். திருடனைத் தனியே பணத்தருகில் விட்டுவிட்டால் திருடு போகாமல் பணம் நிற்குமா! அதே போல நாயுடு இதுதான் சமயமென எண்ணி அங்கிருந்த ஓர் அறையில் நுழைந்தார். அவ்வறையின் அமைப்பே ஓர் விநோதமாக விருந்ததால் நாயுடு அவ்வறையைக் கூர்ந்து கவனிக்கலானர்.

அங்கு பெரிய மரப் பெட்டியொன்று கிடந்தது. அப்பெட்டியை நாயுடு திறந்து பார்த்தார். அதில் ஏதோ சில துணி மணிகள் மட்டும் கிடந்தன. அவைகளைக் கிளறிக்கொண்டிருக்கையில் வெளியில் மனிதர்கள் வரும் காலடிச் சத்தம் கேட்டது. உடனே நாயுடு தான் அங்கிருப்பதை யறியவிடாமல் திடீரென அப்பெட்டிக்குள் இறங்கிக் கதவைச் சாத்திக்கொண்டார். உள்ளே வந்த ஆள் "யாரது இவ்வறையைத் திறந்தது. பெட்டியை ஏன்

காலணு செலவிட மனமற்ற பிசினரிகளுக்கு உயர்தர நாடகம் பார்க்க ஆசைமட்டும் ஊசலாடுகிறது. பணத்தை நினைக்கும்போதோ முகத்தில் அசடு தட்டுகிறது. அத்தகையோர்களுக்கு டிக்கட்டும் இனமாகக் கொடுத்து,வண்டியும் இலவசமாக அனுப்பினல் போவார்களாம். என்னே வேடிக்கை!

திறந்திருக்கிறது." என்று கூறிக்கொண்டே பெட்டியைப் பூட்டி விட்டு அவ்வறைக்கதவையும் பூட்டிக்கொண்டு போய்விட்டான். உள்ளே நாயுடுவை வைத்துப் பூட்டிவிட்டானே என்று வெளியி லிருந்த அவருடைய ஆளுக்கு திடுக்கிட்டது. உள்ளே பெட்டி பூட்டப்பட்டதும், எதற்கும் அஞ்சாத வீர தீர சூரரான நாயுடுவே "ஐயோ! மோசம் போய்விட்டோமே! பாவி பெட்டியைப் பூட்டிவிட் டானே! இதென்ன எதிர்பாராத ஆபத்தாகிவிட்டதே! நாம் பகல் வேஷமாக நடிக்க வந்தது போக பயங்கரத் தோற்றத்தில் ஆபத்தில் சிக்கிக்கொண்டோமே! கஷ்ட காலமே!" என்று தனக்குள் இடிந்து போய்த் திணறியவாறு பெட்டிக்குள்ளடங்கிய பாம்புபோல விழிக்கிறார். அவருக்கே தன்னிலைமை பயங்கரமாகத் தோன்றி விட்டதெனின் அபலையான திலகவதியின் நிலைமையைக் கூற வேண்டுமோ!

14-வது அதிகாரம்

பெண் விழுங்கிப் பேய்கள்; பேய் விழுங்கிப் பெண்கள்

நாம் முன்னர் தெரிவித்தபடி சோமு திலகவதி இந்த விடத்திலிருக்கிறாள் என்பதை அறிந்தது முதல் அவனுக்குத் தன் தமக்கைமீது அதிக ஆத்திரம் மூண்டது. "என்னை வஞ்சித்து ஏமாற்றுவதற்கே அவள் நினைத்திருந்தாள் போலும். இந்த மனிதர்களின் வசம் திலகவதி எவ்விதம் வரக்கூடும். இதற்கு அவளுடைய சகாயமில்லாது காரியம் நடக்கமுடியாது. இருக்கட்டும்." என்று தன் மனத்தில் எண்ணினான். ஆயினும் அதை வெளியிட்டோ அவ்வெண்ணம் தனக்கு இருப்பதாகவோ காட்டிக் கொள்ளவில்லை. அங்கச்சியம்மாளும் அதற்கு

காரணமில்லாமலேயே சிலரிடம் சந்தேகங்கள் உண்டாகின்றன. நேரில் விசாரிக்கையில் எல்லாம் தூரத்து மலையாகிவிடுகின்றது. சந்தேகங்கொண்டு த்வேஷம் காட்டியதுதான் நிற்கின்றது.

அனுகூலமாக அவனிடம் இப் பேச்சைப் பற்றி எடுக்கவே இல்லை. இவ்வாறே இருவரும் மவுனமாகவே இருக்கச் சில தினங்கள் சென்றன. சோமு தானே தனிப் பிரயத்தனத்திலேயே திலகவதியைப் பலி கொடுக்கும் விஷயத்திலிருந்து தப்பவைத்துத் தான் மணந்து சுகமாக விருக்க வேண்டும் என்று எண்ணி நாம் முன்னர் தெரிவித்ததுபோல இடத்தைக் கண்டு பிடித்தான்.

சோமு முன்பு கண்டுபேசிய சின்னன் என்கிற மனிதனைத் தன் வசமாக்கிக் கொண்டு அவன் மூலமாகவே காரியத்தை நடத்தத் தீர்மானித்தான். ஆனால் அது எளிதில் முடிவதாகத் தோன்றாமையினால் வேறு விதமான யுக்தி செய்யலானான். தினம் வருத்துப் போக்குக் காட்டிக்கொண்டே சின்னனிடம் வெகு நேசங்கொண்டு பழகி அடிக்கடி அவனுக்கு மதுபான வகைகள் வாங்கிக் கொடுத்து அவன் நன்றாகக் குடித்து மயக்கங் கண்டுள்ள சமயம் திலகவதியின் இருப்பிடத்தை நன்றாகத் தெரிந்துகொண்டு பின்னும் உயர்ந்த குடியைக் கொடுத்து மயக்க முண்டாக்கிக் கீழே விழும்படியாகச் செய்து விட்டான்.

அதன் பிறகு சோமு மெல்ல சந்தடி செய்யாமல் திலகவதி இருக்கும் இடத்திற்குச் செல்லும் மர்மத்தை யறிந்து அங்கு சென்றான். அப்போது நாம் முன்னதிகாரத்தில் தெரிவித்ததுபோல திலகவதி விசனமே வடிவாய் திகில் பிடித்த பதுமைபோலக் கிடக்கிறாள். அவளுடைய நிலைமையைக் கண்டு அவளாலேயே சகிக்கமுடியவில்லை. தத்தளித்து மெய் சோர்ந்து "ஹா! என்ன செய்வேன்! ஈசா! என்னை இவ்விதம் சித்திரவதை செய்வதைவிட என்னுயிரை அடியோடு வாங்கிக் கொண்டால் நான் கொடுக்கத் தயாராக விருக்கிறேனே! மனிதர்கள் வசிக்கத் தகாத இவ் விருட்டு அறையில், பாதாள கிடங்கில் என்னைப் போட்டு வதைப்பதற்குக் காரணந்தான் என்னவோ தெரியவில்லையே! இவ்வித சித்திரவதை செய்யும்

அற்பத்தனமாகக் கணக்கு பார்ப்பதிலேயே சிலருக்கு நாட்டம். அத்தகையோருக்குத்தான் அனுமத்தாகக் கொள்ளை யடிக்கும் பேர்வழிகள் தாராளமாகச் சேர்ந்து விடுகிறார்கள். அல்பத்தனத்தினால் நல்ல காரியத்தை நிறக்கவிடாது செய்வதுதான் மிஞ்சுகின்றது.

மனிதன் வாரிக் கொள்ளும் பாக்யந்தான் என்னவோ! ஹா! சுகுமாரா! என் கண்ணாளா! நானோ இப் பாதாள அறையில் பாதகர்களின் கையில் அகப்பட்டு அல்லலுறுகிறேன். நீ எந்த நிலைமையிலிருக்கிறாயோ! பாவி என் கடிதம் உனக்கு எத்தகைய எமனாக முடிந்ததோ!

சுகுமாரா! என் மனத்தைக் கவர்ந்த கம்பீரா! உன் திருமுகம் கண்டு எத்தனை நாளாகி விட்டது. என்னை இக் கதிக்கு உள்ளாக்கிய பாவிகள் உன்னை என்ன செய்து விட்டார்களோ! அதை நினைக்க என் அங்கம் பற்றி எரிகிறதே! என்னைக் காதலித்ததற்கு உனக்குப் பெருந் தொந்தரவை வைத்து விட்டேனே! சுகுமாரா! இவ்விதம் நடக்கும் என்று நான் கனவில்கூட நினைக்கவில்லையே! இத்தகைய பேரிடி போன்ற பழி என்மீது வந்து தாக்கவும், அதே நிமித்தமாய் நான் பாதாள கிடங்கில் வீழ்ந்து பரிதபிக்கவும், யார் செய்த சதியாலோசனையோ தெரியவில்லையே!'' என்று கண்ணீர் விட்டுக் கலங்கினாள். சித்தஞ் சிதறியவள்போலத் தத்தளித்தாள். மீண்டும் அவ் வறையைச் சுற்றிப் பார்த்தாள். ஒன்றும் பயனில்லாததால் அவளுடைய மனம் உடைந்து சலிப்புற்றுக்கீழே விழுந்துவிட்டாள்.

அப்படியே கண்ணயர்ந்து விட்டாள். அதே சமயத்தில்தான் நாம் முன்னர் தெரிவித்ததுபோல சோமு கையில் (ஒரு டார்ச்சு லைட்டு) கை விளக்குடன் அவ்வறையில் ப்ரவேசித்தான். அழுக்குப் படிந்த தரையில் தலைவிரி கோலமாகக் கிடக்கும் திலகவதியைக் கண்ட சோமுவின் மனமே சற்று திடுக்கிட்டது. அவள் தான் வந்திருப்பதை யறிந்தால் என்ன நினைப்பாளோ! என்ற அச்சம் ஒரு புறம் பாதித்தது. இத்தகைய உணர்ச்சிகளோடு, அவன் அவ்வறைக்குள் சென்று மெல்லிய குரலால் பேசத் தொடங்கி "திலகம்! என் கண்மணி! பயப்படாதே; கூச்சலிடாதே! நீ தற்போது ஓர் பெரிய

மாமியார் என்கிற பதவியைப் பெற்று விட்டால் மருமகளைச் சித்திர வதை செய்வதுதான் அதன் முதல் காரியமாகச் சில மாமியார்கள் இக் காலத்திலும் நினைக்கிறார்கள். கணவனாவது பிரீதியாகவிருந்தால் அந்த மருகியின் துயரத்திற்கு விமோசனமுண்டு. அவனும் அன்பற்ற கட்டையாக விருப்பின் அப் பேதைப் பெண் என்ன செய்வாள்! இத்தகைய

ஆபத்திலிருக்கிறாய் என்பது நீ அறிந்த விஷயமே! ஆகையினால் கூச்சலிடாதே! நிதானமாக விரு.'' என்று கூறினன்.

தன்னிரை யழிந்து தரையில் கிடக்கும் திலகவதி இந்த குர லைக் கேட்ட உடனே திடுக்கிட்டு அலறி எழுந்திருந்தாள். அப்போது இராக்கால மாகையினால் எங்கும் இருள் குமிழிக் கிடந்தது. சோமு வின் கையிலுள்ள விளக்கின் ஒளி இவள் கண்ணுக்கு நேராகப் பட் டதும் கண்கள் கூசின. கண்ணைப் பிசைந்துகொண்டே "யாரது! யார் என்னைக் கூப்பிட்டது? சுகுமாரா!...இதென்ன! மூடத் தனமாக அவன் பெயரைக் கூறுகிறேன்?'' என்று தனக்குள் நினைத் துக்கொண்டு எழுந்து நின்று, வந்த உருவத்தை நன்றாகக் கவனித் தாள். அவன் சோமு என்பதை அறிந்த உடனே திடுக்கிட்டு, "ஹா! சோமு மாமா! என்னைத் தாங்கள் இவ்விதம் வஞ்சனை செய்து பாதாள கிடங்கில் அடைக்கலாகுமா! என் மீது தங்களுக்கு இத் தகைய கோபமேன்? ஆத்திரம் ஏன்? என்னை விட்டு விடுங்கள். எத் தனை நாட்களாக நான் இவ்விதம் கஷ்டப் படுவது. நான் ஓர் அனாதை என்பது தமக்குத் தெரியவில்லையா! என்மீது தயை இல் லையா! அன்றே நான் எத்தனை கத்தியும், எத்தனை கூச்சலிட்டும் உங்களுக்குக் காதில் விழாததுபோலப் போய்விட்டீர்களே! தங்கள் காலைப் பிடித்துக் கொள்கிறேன். என்னைக் காப்பாற்ற வேண்டும்'' என்று காலில் விழுந்து, கெஞ்சியும் கண்ணீர் வடித்தும் கேட்டாள்.

இதைக் கேட்ட சோமு மிகுந்த அன்பாயும் தாழ்ந்த குரலி லும்பேசத் தொடங்கி, "திலகம்! கத்தாதே! நானா உன்னை இவ்விதம் வைப்பேன். விவரமறியாது நீ பேசுகிறாய்! அன்று கத்தியது என் காதில் கேளாமலில்லை. அவ்வாறு கேட்டதினால்தான் உன்னிருப் பிடம் இங்கு என்று தெரிந்து கொண்டேன். உடனே உன்னை விடு விக்க நான் செய்த ப்ரயத்தனம் கொஞ்சமன்று. உன்னை யார்

பெண்வதை செய்யும் மாமியும், கணவனும் சனாதன தர்மத்தை நிலை நாட்ட வெட்கமின்றிப் பேசுகிறார்களாம். தன்னுடைய முக்கிய தர்மம் இன்னதென்று தெரிந்துகொண்ட பிறகல்லவோ அதில் ப்ரவேசிக்க வேண்டும்?

இங்கு சிறை வைத்திருக்கிறார்கள் என்ற விவரம் பின்னால் தெரிவிக்கிறேன். நீ தப்ப வேண்டுமானால், உன் காதலன் தப்பி நன்றாகவிருக்க வேண்டுமாயின் வாய் திறக்காமல் என்னுடன் கிளம்பு. நான் உன்னை வீட்டில் கொண்டு சேர்க்கிறேன். பிறகு சவிஸ்தாரமாகக் கூறுகிறேன். நாழியாகிறது. சீக்கிரம் கிளம்பு. சுகுமாரன் பெரிய ஆபத்திலிருக்கிறான். அவனைக் காப்பதற்காகவே நீ சீக்கிரம் வர வேண்டும். எழுந்திரு'' என்றான்.

இதைக் கேட்ட திலகவதிக்குக் கலவரமுண்டாகி விட்டது. தன்னை யபகரித்தவன் சோமுவே என்று எண்ணியதற்கு மாறாக அவனே தன்னை மீட்பதாகக் கூறுவதைக் கேட்க மிக்க வியப்பும் யோசனையும் உண்டாகி விட்டன. அவனை நம்புவதற்கும் அவள் மனம் இடங் கொடுக்கவில்லை. சுகுமாரனுக்கு ஏதோ ஆபத்து என்று கூறுகிறானே! இதன் உண்மை எதுவோ தெரியவில்லையே! இந்த தரும சங்கடத்திற்கு என்ன செய்வேன்?'' என்று சிறிது நேரம் யோசித்தாள். சோமு "மாமா! தாங்கள் கூறுவது எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! சுகுமாரனுக்கு ஏதோ ஆபத்து என்கிறீர்களே! அது என்ன ஆபத்து? என்னை யார் இக் கதிக்கு உள்ளாக்கினார்கள். தயவு செய்து சொல்லுங்கள்.'' என்று கேட்டாள்.

சோமு:—திலகம்! நீ கேள்வி கேட்பதற்கும் நான் பதில் கூறுவதற்கும் இது காலமல்ல. என்னை நம்பாது இம்மாதிரி தியங்குகிறாய் என்று தெரிகிறது. சுருக்கமாகக் கூறுகிறேன் கேள். சுகுமாரனின் உறவினரோ, தெரிந்தவர்களோ யாரோ ஒருவரின் மகள் அவனைக் காதலித்திருக்கிறாளாம். சுகுமாரன் உன்னைக் காதலித்து உன்னையே மணப்பதாகத் தீர்மானித்து விட்டபடியால் அவன்மீது கோபங்கொண்டு அவனைத் தன் வசமாக்கிக் கொள்ளும் பொருட்டு அவனுக்கு இங்குள்ள துஷ்டர்களின் மூலம் ஏதோ மந்திரித்த மருந்தை வாங்கிக் கொடுத்துவிட்டாள். அதை யுண்ட உடனே

சில குள்ளநரிகள் தமக்கு மிகவும் வேண்டிய மனிதர்கள் என்று ஒரு காலத்தில் நடத்தியவர்களையே பின்னும் சில காலத்திற்குள் பின்னால் தூற்றுவதும், தூஷணையாயும், பரிகாஸமாயும் பெரியார், சிறியார் என்கிற

அவனுடைய உயிருக்கே பெரிய ஆபத்தாக முடிந்துவிட்டது. உயிருக்கு மன்றுடுகிறுன். உன்னை அடியோடு தொலைத்துவிட எண்ணி இந்த மந்திரக்காரர்களின் மூலமே உன்னை இங்கு கொண்டு மறைத்து விட்டதோடு இவர்களின் மூலமே ஓர் க்ஷுத்ரதேவதைக்கு உன்னைப் பலி கொடுக்கும்படியும் ஏற்பாடாகி விட்டது. நான் இவ்வனியாயங்களை எல்லாம் கவனித்துக் கண்டு பிடித்து உன்னை மீட்டுச் செல்ல வந்தேன்—என்று அவன் கூறி முடிப்பதற்குள் "என்ன! என்ன! சுகுமாரனுக்கு மந்திர மருந்திட்டு என்னை இவ்விதமாக்கினுர்களா! ஐயோ! சோமு மாமா! சுகுமாரனைத் தாங்கள் பார்த்தீர்களா! என்ன நிலைமையில் இருக்கிறுர்? அதைத் தயவு செய்து சொல்லுங்களேன். மனம் தவிக்கிறதே!" என்று பதறியவாறு கேட்டாள்.

இது கேட்ட சோமு "திலகவதி! சுகுமாரனை நான் நேரில் சென்று கண்ணுல் கண்டேன். அவன் தன்னிலை தவறிக் கிடக்கிறுன். எனினும் "கண்மணி! திலகவதி! திலகவதி!" என்று வாய்ப் பிதற்றுகிறுன். ஆதலால் நீ சென்று எதிரில் நின்றுல் தெளிந்து விடும் என்று தோன்றுகிறது. உம். உடனே ஓசை செய்யாமல் நான் எவ்விதம் செல்கிறேனே அவ்வாறே நீ வரவேண்டும். சந்தடி செய்தால் யாராவது வந்து பார்த்து இருவரையும் பிடித்துக்கொள்வார்கள்." என்று கூறித் தான் முன்னே விளக்கைக் காட்டி வழி நடந்தான்.

திலகவதி சுகுமாரனுடைய நிலைமையைக்கேட்டு மனம் இடிந்துவிட்டதால் சவம்போல அவன் பின்னேயே செல்லவாரம்பித்தாள். மனமோரிடம்; காயமோரிடமாக வரும் திலகவதியை அழைத்துக் கொண்டு பின்புறத் தோட்டத்தை யடைந்தான். அங்கு தயாராக நின்றுகொண்டிருந்த மூடி போட்ட மோட்டாரில் திலகவதியை ஏறச்செய்துத் தானும் ஏறிக்கொண்டு வண்டியை விட்டுவிட்டான். வண்டியின் வேகத்தையும் திலகவதியின் மனேவேகத்தையும் பந்த

மதிப்பற்றும் பேசுகிறுர்கள். அந்த மனிதர்களின் காதில் இந்த வார்த்தைகள் விழுந்து விட்டால் அவர்களின் மனம் எப்படி இருக்கும்? பிறகு ஆயிரம் குலாவியும் உபயோகப் படுமா!

யத்திற்கு விட்டுள்ளதுபோல இரண்டும் ஒன்றுக்கொன்று போட்டியாகப் பறக்கின்றன. சோமுவுக்குக்கூட தன்னிடம் இவ்வளவு இரக்கம் உண்டாகிவிட்டதே! இவன் கூறியது யாவும் உண்மையாகவிருக்குமா! என்ற எண்ணம் அவளைப் பாதிக்காமலில்லை. எதற்கும் தான் அவ்விடத்திலிருந்து தப்பிவிட்டால் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணினாள். தான் மீண்டும் வீட்டிற்குச் சென்றதும் அங்கச்சியம்மாள் என்ன சொல்வாளோ! எவ்விதம் நடத்துவாளோ! என்கிற பயம் ஒரு புறம் பாதிக்கின்றது. இத்தகைய உணர்ச்சிகளோடு 'எப்போது சுகுமாரனைக் காணப்போகிறோம்?' என்று எண்ணி ஏங்கியவாறு செல்கிறாள்.

வண்டி வெகுநேரம் சென்று ஓர் இடத்தில் நின்றது. 'திலகம்! இறங்கு'' என்று சோமு கூறிக்கொண்டே முதலில் இறங்கினான். திலகவதி பரபரப்புடன் "மாமா! இது எந்த வீடு? இவ்விடத்திலா சுகுமாரன் படுத்திருக்கிறான்? மாமி இங்கிருக்கிறாளா!'' என்று கேட்டாள். சோமு மெல்லிய குரலில் பதில் பேசத் தொடங்கி "திலகம்! கத்தாதே; அக்கா உள்ளேதானிருக்கிறாள். உன்னை யாரோ அபகரித்துவிட்ட விஷயம் அவளுக்குத் தெரியாது. அவள் உன்மேல் கோபங் கொண்டிருக்கிறாள். நீயாக எங்கேயோ ஓடிவிட்டதாக எண்ணி இருக்கிறாள். ஆகையினால் நீ இப்போது ஒன்றும் பேசாதே! நான் அக்காவிடம் உன்னுடைய விஷயத்தைக் கூறி உன்மேலுள்ள கோபத்தைத் தணியச் செய்துவிடுகிறேன். பிறகு பகிரங்கமாக வெளியில் வந்து உன் காதலனைப் பார்க்கலாம். அதோடு இன்னொரு முக்கிய செய்தி. நீ யார் யாரிடம் பணம் வாங்கி வந்தாயோ அவர்கள் எல்லாம் உன்மேல் குற்றஞ்சாட்டிப் போலீஸில் தகவல் கொடுத்திருக்கிறார்கள். போலீஸாரும் உன்னைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் கண்ணில் நீ பட்டுவிட்டால் உடனே

வினு.—அதோ வரும் மனிதன் கடன் கேட்கத்தான் வருகிறான். அவனுக்குக் கொடுத்த பணத்திற்குத் தர்ப்பணந்தான் விடவேண்டும். என்ன செய்வது?

உன்னைக்கைதியாக்கிச்சிறைச்சாலைக்குக்கொண்டுபோய்விடுவார்கள். அதன் பிறகு எந்த காரியமும் செய்ய முடியாது. அவனுடைய விஷயத்தை உன்னிடங் கூறவும், நீ அதை யறியவும் சற்றும் முடியாது போய்விடும். ஆகையினால் நீதான் முதலில் வெகு ஜாக்ரதையாக இருக்கவேண்டும். உன்னுடைய நலனைக் கோரியே நான் இத்தனை தூரம் ப்ரயாசப்படுகிறேன். நீ வித்யாசமாக நினைக்காதே. என்னை முற்றிலும் நம்பு." என்று கூறிக்கொண்டே அவளை யோர் விடுதிக்குக் கொண்டுபோய் "திலகா! இந்த வீடு பூராவும் நீ எங்கு இருக்க இஷ்டப்பட்டாலும் இருக்கலாம். நான் போய் அக்காவின் கோபத்தைச் சாந்தி செய்துகொண்டும் சுகுமாரன் எப்படி இருக்கிறான் என்று பார்த்துக்கொண்டும் காலையில் வருகிறேன். நித்திரை செய். விழித்திருக்காதே! பயப்படாதே!" என்று வெகு நயமாகத் தேறுதல் கூறிவிட்டு வெளியில் சென்றான்.

அவ்வாறு வெளியில் சென்றவுடனே திலகவதிக்கு உண்டான குழப்பத்திற்கு ஓர் எல்லையே இல்லை. அவள் மனம் தத்தளித்து நிலையிற்றங்காது சுழல்கின்றது. விஷயம் இன்னதென்று தகவலே தெரியவில்லையாகையினால் எண்ணெயில் விழுந்த ஈ போன்று குழம்பிப்போய்விட்டாள். அங்கச்சியம்மாள் எண்ணி இருப்பது ஒன்று; நடந்த விஷயம் ஒன்று. இதென்ன ஆச்சரியம்! சுகுமாரனைக் காதலித்த கன்னிகை வேறு யாராக விருக்கும்? இவ்விஷயம் உண்மையானதாக விருப்பின் சுகுமாரன் ஒரு தினமாவது அதைத் தெரிவித்திருக்கமாட்டானா! இந்த விஷயத்தைப்பற்றி வாயே திறக்காமலிருப்பதற்குக் காரணம் யாதாக விருக்கும். என்ன செய்வேன்! இவனோ அயோக்யனில் முதல் நம்பர். இவன் வார்த்தைகளை நம்புவதற்குச் சற்றும் மனம் வரவில்லை. எனினும் சந்தர்ப்பங்களைப் பார்த்தால் நம்பாதிருப்பதற்கும் முடியவில்லை. உண்மையில் சுகுமாரனுக்கு அப்படிச் செய்திருப்பார்களா! ஐயோ! அவ்விதமிருக்குமாயின் ஈசா! நீ அவர் உயிருக்கு எவ்விதமான ஹானியுமின்றிக் காப்

விடை.—அவன் வீட்டிற்கு வருவதற்குள் நீ ஓட்டமாக அவன் எதிரில் சென்று "ஐயா! உன்னைத் தேடித்தான் நான் வருகிறேன். அவசரமாக 5 ரூபாய் வேண்டும்; நாளையே கொடுக்கிறேன்" என்று கேள்; அவன் வந்த வழியோடு திரும்பிவிடுவான்.

பாற்றவேண்டும். சுகுமாரா! ஐயோ! இந்த ரகஸியத்தை இது காறும் என்னிடம் கூருமல் நீ ஏன் ஒளித்தாய்! இதை என்னிடம் கூறி இருந்தால் நான் இத்தகைய ஆபத்துக்களுக்கு இடமின்றி நடந்துகொண்டிருப்பேனே! உன்னைக் காதலிக்காத கன்னிகைகள் கூட விருப்பார்களா! அத்தகைய வனிதையை யார் என்று நான் அறிவது?

எனக்கு அவளைத் தெரியுமாயின் 'சுகுமாரனை நீயே மணந்து கொள்; அவருடைய பாத பூஜை செய்ய—பணிவிடை செய்ய—ஆளாக என்னை யமர்த்திக்கொள்' என்று நான் அவ்வனிதையைக் கேட்டுக்கொண்டிருப்பேனே! அவளுடைய வரலாறே எனக்குத் தெரியவில்லையே! என்ன செய்வேன்?'' என்று கலங்கிக் கண்ணீர் விட்டவாறு அவ்வறையிலுள்ள கருங்காலி விசுப்பலகையின் மீது படுத்துக்கொண்டாள். நித்திரையே கொள்ளவில்லை. திடும் திடும் என்று எழுந்திருப்பதும்,சுற்று முற்றும் பார்ப்பதும் திகில் கொண்டு விழிப்பதுமாக இரவை யோட்டினுள். காலையில் சோமுவின் வரவை எதிர்பார்த்தாள்.

மணி 8 ஆகியும் சோமுவைக் காணவில்லை. அவ்விடத்தை விட்டு வெளியில் சென்று அவ்வீடு முற்றும் சுற்றிப் பார்த்தாள். அவ்வீடு அழகிய மாடி வீடாகத் தென்பட்டதே யன்றி மனித வாச மில்லாத காலி வீடாக விருந்தது கண்டு திலகவதி திடுக்கிட்டாள். தன் மனத்தின் தைரியத்தை விடாமல் ஒவ்வொரு அறையாகச் சுற்றி வளைத்துப் பார்த்தாள். அவ்வீட்டின் கட்டிட அமைப்பி னின்று அது ஓர் பெரிய மனிதரின் வீடாகத் தோன்றியது. இத் தனை பெரிய தனித்த வீடு இவனுக்கு ஏது? இவன் இதில் நம்மைத் தனிமையில் கொண்டு வருவதற்குக் காரணம் என்ன? ஐயோ! இது ஏதோ பயங்கரமாகத் தோன்றுகின்றதே!'' என்று பயந்தவாறு முற்

யாரைக் கண்டாலும் எடுப்பாகப் பேசிப் பரிகஸித்துக் குத்தலாகக் கூறுவதே சிலருக்குத் தொழிலாக விருக்கிறது. அதனுல் விளையும் கேடோ, துர்ப் பெயரோ அப்போது அவர்களறிவதில்லை. வாய்ப் பறை சாற்றுவதிலேயே தங்களைப் போன்ற சாது இல்லை என்று கூறிக் கொள் கிருர்கள்.

றிலும் பார்த்துக்கொண்டு வீதிப்பக்கம் சென்றாள். நடுக்கதவு வெளிப்புறம் பூட்டப்பட்டிருந்தது. பின்புறம் சென்று பார்த்தாள். அங்கும் கதவு வெளியில் பூட்டியிருந்தது கண்டு முன்னிலும் அபாரமான திகில் கொண்டு சமையல் கட்டிற்குச் சென்றாள்.

அங்கு ஒரு கிழவி சமையல் செய்துகொண்டிருந்தாள். அவளைக் கண்ட திலகவதி "பாட்டீ! நீங்கள் யார்! சோமு எங்கே சென்றார்? அங்கச்சியம்மாள் எங்கே?" என்று அடுக்காகக் கேள்விகளைக் கேட்டாள்.

கிழ—அம்மா! அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் நேற்று முதல்தான் இங்கு சமையல் செய்ய வந்திருக்கிறேன். உனக்கு என்னென்ன வேண்டுமோ அவைகளைச் செய்து போடச் சொன்னார். நான் இரண்டு தரம் உன் அறையில் வந்து பார்த்தேன். நீ அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாய்; அதனால் வந்துவிட்டேன். என்ன சமயல் செய்வது? காப்பி பலகாரம் தயாராகவிருக்கிறது. அதைச் சாப்பிடுவாம்மா!—என்று வெகு அனுதாபத்துடன் கூறினாள்.

அது கேட்ட திலகவதிக்கு இது ஏதோ பெரிய மோசம் என்று தெரிந்துவிட்டது. அதனால் அவளுடைய பயம் அதிகரித்தது. அவள் கிழவியை நோக்கி "பாட்டீ! இந்த வீட்டின் இரு பக்கத்தின் கதவுகளும் ஏன் வெளிப்புறம் பூட்டி இருக்கின்றன இதன் காரணங்கூடவா உனக்குத் தெரியாது? ஒரு வீடு என்றால் வீட்டின் கதவுகள் திறந்திருப்பது அழகா, பூட்டி இருப்பது அழகா! ஏன் இவ்விதம் இருக்கிறது?" என்றாள்.

கிழ :—அம்மா! நான் எதைக் கண்டேன்? நானே கூலிக்காரி எனக்கு ஒரு விஷயமும் தெரியாது. எந்த மட்டும் வேலை செய்யச் சொல்கிறார்களோ அந்த மட்டும் செய்து விட்டுப் பேசாமலிருக்க

விவாகம் என்கிற பெயரை வைத்து விட்டாலே அந்த விடத்திற்கும் மனிதர்களுக்கும் ஒரு உற்சாகமும் சோபிதமும் வந்து விடுகின்றது. விவாகப் பெண் பாலிய விதவை யாயினும் அவள் முகத்தில் லக்ஷணமானது களை தாண்டவமாடுகின்றது.

வேண்டியவள்தான். இதை விட்டு மற்ற விவகாரங்களைக் கவனிக்க என்ன அதிகாரம் இருக்கிறது. ஏன் அப்படிக் கேட்கிருய்?

திலக:—பாட்டி! சகஜமாகக் கதவு திறந்திருப்பதை விட்டுப் பூட்டி இருந்தால் விகாரமாயும் பயங்கரமாயுமிருக்கிறதல்லவா! இந்த தனித்த விடத்தில் எதற்காக வந்து காத்துக் கொண்டிருக்கிருய்! இதன் காரணம் என்ன என்பதை எனக்குக் கூறலாகாதா!— என்ருள்.

அந்த மனுஷி வாய் திறக்கவில்லை. மின்னுள் சுற்று முற்றும் திரிந்தலைந்தாள். காப்பி, பலகாரம் தனக்கு வேண்டாம் என்று கூறிவிட்டாள். அவளுக்குப் பெரிய சந்தேகம் உதித்து விட்டதால் வேதனை யதிகரித்தது. வஞ்சகக்கார சோமுவின் வரவை எதிர் பார்த்து ஏங்கிஞள். பயனில்லை; ஆகாரம் கொள்ளும்படி அக் கிழவி எத்தனை கூறியும் அதை மறுத்து விட்டாள். அன்று பூராவும் சென்று விட்டது.

திலகவதி படும் வேதனையும் சங்கடமும், அந்த வேலைக்காரிக்குக்கூடப் பரிதாபகரமாக விருந்தது. தண்ணீர்கூடக் குடிக்காமல் பட்டினி கிடக்கும் சிறு பெண்ணை விட்டு விட்டுத் தான் புசிக்க மனங் கொள்ளாது தவித்தாள். அடிக்கடி உள்ளே வந்து திலகவதி இருக்கும் பரிதாபத்தைக் கண்டு வருந்தி மீண்டும் செல்வாள். இவ்விதமே கிழவியும் பொழுதை யோட்டிஞள்.

இரவு முற்றும் திலகவதி நித்திரை என்பதே கொள்ளாது தன் போக்காகக் கதறி யழுது தவித்ததைக் கண்ட கிழவி அவளருகில் வந்து "அம்மா! நீ இரவு முற்றும் 'சுகுமாரா! சுகுமாரா!' என்று பிதற்றிஞயே. அவன் யார்? எதற்காக உன்னை இங்கு வைத்திருக்கிருர்கள்?" என்று கேட்டாள்.

மகா புத்திசாலி என்று யாரை எண்ணுகிருேமோ அவர்களிடத்தில் தான் அசட்டுக்களையும் முரட்டுப் பிடிவாதமும் தாண்டவமாடுகின்றன. அசடு என்று நினைப்பவர்கள் அசகாய சூரர்களாகி விடுகிருர்கள். எல்லாம் அவரவர்களின் அதிர்ஷ்டம்.

திலக:—(புலம்பியபடியே) பாட்டி! உன்னிடம் இது விஷய மாக என்ன சொல்லி இருக்கிறார்கள்? அதைக் கூறு. நான் பிறகு விவரம் உரைக்கிறேன்.

கிழவ:—ஐயோ! நானா கூறுவது. உன்னைப் பார்த்தாலோ என் மனம் தத்தளிக்கின்றது. நானோ ஊழியக்காரி. அதிலும் மகா கொடும் பாவி. நேற்று உன்னைப் பார்த்தது முதல் என் மனத்தில் வேதனை செய்வது கூறத் திறமன்று. அதன் காரணம் எனக்கே தெரியவில்லை. உன்னோடு அதிகம் பேசுவது கூடாதென்று எனக்கு உத்தரவு. நான் அதை மீறிப் பேசுகிறேன். நீ யார் யாரையோ மோசம் செய்து வஞ்சித்து கள்ளக் கையொப்பமிட்டுப் பலரிட மிருந்து பணத்தை வாங்கி விட்டதற்காக உன்னைப் போலீஸார் தேடுகிறார்கள் என்றும், அதற்காக ஒளித்துக் காப்பாற்றுவதாயும் என்னிடம் கூறினான். உன்னை மணந்து கொள்ளப் போவதாயும் கூறினான். அந்த மனிதன் கூறும்போது நான் என்னமோ என்று நினைத்தேன். இப்போது நீ தவிப்பதையும்,உன்னுடைய குணத்தை யும் பார்க்கையில் அந்த மனிதன் கூறியது சுத்தப் பொய்யென்று என் மனத்தில் தோன்றுகிறது. மகா பரிசுத்தவதியாய் களங்கமற்று விளங்கும் நீயா கள்ளக் கையொப்பக் கடிதமெழுதி இருப்பாய்? என்ன அநியாயமிது! நடந்த உண்மைதான் என்ன?'' என்று கேட் டாள்.

இதைக் கேட்டதும் திலகவதியின் சந்தேகங்கள் பலத்து விட் டன. "ஆகா! பாட்டி! நான் ஏதோ மோசத்தில் அகப்பட்டுக் கொண்டதாக இப்போதுதான் அறிகிறேன். என்னுடைய பிறவி யில் நான் எவ்விதமான தண்டா வேலைகளும் செய்ததில்லை. என்னைக் காப்பாற்றுவதாகவே வஞ்சித்து அழைத்து வந்து அவன் என்னை

வேலை கொஞ்சமாக இருக்கையில் இன்னும் கொஞ்சம் சேர்ந்ததும் ஒரே நெட்டாகச் செய்து விடலாமென்று அசிரத்தையாயிருப்பது. அதிக மாகச் சேர்ந்த பிறகோ, இவ்வளவை எப்படிச் செய்து முடிப்பது என் கிற கவலையால் கிலி பிடித்துத் தாமதஞ் செய்வது. எதையும் அவ்வப் பொழுது செய்து முடிப்பதே உத்தமமானது.

மோசம் செய்துவிடப் போகிறான். ஐயோ! நான் என் செய்வேன்? பாட்டி! நான் அனாதையிலும் அனாதை. என்னைப்போன்ற அனாதைகள் உலகத்திலேயே இருக்கமாட்டார்கள். என்னைப் பெற்ற தாயைப்போல உன்னை நினைக்கிறேன். உனக்கு இன்னும் என்ன ரகஸியம் தெரியும் அதைக் கூறி விடு. என்னை இச் சமயம் நீதான் காப்பாற்ற வேண்டும்.'' என்று அந்தக் கிழவியின் காலைப் பிடித்துக் கொண்டு கீழே விழப் போனாள்.

அச் சமயம் கிழவி எழுந்து சற்று விலகி நின்று "அம்மா! நீ யாரோ! நான் யாரோ! ஒருவரை யொருவர் அறியாவிடினும் உன்னைப் பார்க்கும்போது நான் என்னை யறியாமல் மாறுதலை யடைகின்றேன். இதன் காரணம் எனக்குப் புலப்படவில்லை. நான் மகா சண்டாளன். நீ என்னைத் தீண்டுவதே கூடாது. இப் பிராணனைக் காக்கும் பொருட்டு நான் வெட்கங் கெட்டு உன் போன்ற புனிதமான பெண் உருவத்தில் மறைந்து கிடக்கின்றேன். என்னை யறியாது நான் உண்மையைக் கூறிவிட்டேன். நான் கட்டிய பெண்டாட்டியைக் கொலை செய்த பாதகன். என் முகத்தில் விழித்தால் கூட உனக்குப் பாப முண்டாகும். அந்த குற்றத்திற்காக நான் தண்டிக்கப் பட்டேன்.

சிறையில் என்னோடு கூடவிருந்த சில கைதிகள் வார்டரை ஏமாற்றிவிட்டு எப்படியோ தப்பித்துக்கொண்டு வெளியேறிவிட்டார்கள். அவர்களுடன் நானும் வந்து விட்டவன். எங்களை உடனே போலீஸார் தேடி யலைய வாரம்பித்தார்கள். நாங்கள் வெளியேறிய உடன் ஒவ்வொருவரும் பிரிந்து விட்டோம். அது முதல் நான் புதுச்சேரியிலேயே சில காலம் மறைந்திருந்தேன். தாடி மீசை வளர்த்துக் கொண்டு துருக்கனாகச் சில காலம் இருந்தேன். அதிலும் சந்தேகம் பிறக்கும்போலத் தோன்றியது. அது முதல் தினம் ஒரு

பணம் கொடுக்க வேண்டியவர்களைக் கேட்க சங்கோசப் பட்டுப் பேசாதிருந்தால் அவர்கள் கொடுக்காமலேயே இருக்கிறார்கள். கொஞ்ச காலம் கழித்துக் கேட்டால் "முன்னதாகவே கேட்டிருக்கலாகாதா செல வழிந்து விட்டதே!" என்கிறார்கள். நாம் கேட்காமலேயே கொடுக்க வேண்டு மென்கிற எண்ணம் உண்டாவதில்லை.

வேடத்தில் மறைந்தேன். இப்போது சில காலமாக இவ்விதமே பெண் வேடத்தில் மறைந்திருக்கிறேன். இதிலிருந்தும் கட்டாயம் நான் அகப்பட்டுக் கொள்வேன் என்பது எனக்குத் தெரியும். நான் பூர்வ கர்மத்தின் பலத்தினுல் இஜ் ஜென்மத்தில் எவ்வித ஸார்த்தகமும் காணுத பேடியாகப் பிறந்து விட்டதால் மீசை முதலிய தொந்தரவு இல்லாது அது என்னைக் காப்பாற்றுகின்றது. மகா கொடும் பாவியாகிய என் விஷயமெல்லாம் தெரிந்திருந்தும் என்னைத் துணைக்கு அழைத்துச் சிபார்சு செய்கையிலேயே அந்த மனிதனிடத்தில் எனக்குச் சந்தேகம் உண்டாகி விட்டது. அதோடு நான் சிறைச்சாலையை விட்டு வெளி வந்த வுடன் பிரிந்த சகாக்கள் இந்த மனிதனுடன் இருக்கக் கண்டேன். அது முதல் என் மனமே என்னை யறியாது மாறுதலடைந்தது.

ஏனெனில் அந்த மனிதர்கள் இயற்கையிலேயே மகா கொடிய குணத்தை யுடையவர்கள் என்று எனக்குத் தெரியும். அவர்கள் வேண்டுமென்று துன்மார்க்க வேலைகளைச் செய்துவிட்டு சிறைச்சாலைக்கு வந்தார்கள். நான் மட்டும் யோக்கியன் என்று நினைப்பாயோ! என்னுடைய விதியினுல் நான் அவளை அடிக்கவும், ஏற்கெனவே சீக்காகக் கிடந்த அவள் இறக்கவும், அப்போது எனக்குச் சத்ருக்களாக விருந்தவர்கள் அதை யோர் காரணமாகக் காட்டி என்னைப் பழி வாங்கிவிட்டார்கள். இந்த துஷ்டர்களைக் கண்டதும் எனக்கு ஒரு விதமான வெறுப்பு உண்டாகி விட்டது.

இப்பாவிகளுடன் நான் ஏன் தப்பித்துக்கொண்டேன் என்று வருந்தினேன். எத்தனை பேர்களை இந்தப் பாவிகள் கெடுக்கிறார்களோ! எத்தனை குடியைக் கெடுத்தார்களோ என்று நினைக்கும் போது மனம் கூசுகிறது. அது முதல் நான் ஓர் தீர்மானம் செய்து கொண்டேன். நான் அகப்பட்டுக்கொண்டு என் காலத்தைச் சிறையிலேயே கடத்தி மாண்டுவிடுகிறேன். இப்பாவிகளையும் அவர்

எத்தனைதான் மேல் வேஷத்திற்காக அன்பு காட்டி நடித்தாலும் அவர்களின் நடிப்பு முகத்தின் சாயலிலேயே தெரிந்து விடுகிறது. பிறருக்கு முக உல்லாசத்தின் பொருட்டு அன்பு உதிப்பதென்றால் அது உண்மையான தாகுமா? தானுகச் சுரக்காவிடின் பலன் ஏது?

களைச் சேர்ந்த மற்றவர்களையும் காட்டிக்கொடுத்துவிட்டு இவர்களால் இனி பிறருக்குத் தீங்கு நேராமல் தடுக்கவேண்டும் என்றதேயாம். இத் தீர்மானம் மனத்தில் தோன்றியதனாலேதான் உன்னிடம் நான் உண்மையை ஒளியாது உரைத்துவிட்டேன். மகா பாபி நான் என்பதை முதலில் நான் அறியாவிடினும் நாள் செல்லச் செல்ல என்னை நானே வெறுத்துக் கொள்கிறேன். இப்போது இங்கு நடக்கும் சூது வாதுகளைக் கண்டால் உன்னையும் இப் பாவிகள் மோசக் கருத்துடன்தான் கொண்டுவந்திருப்பதாக நான் நினைக்கிறேன்.'' என்று அவள் கூறி முடிக்குமுன் பின்புறத்திலிருந்து பட்டார் என்று ஓர் வெடிச் சத்தங் கேட்டது.

அடுத்த விநாடி ஓர் சிறிய குண்டு அந்த மனிதன்மீது பாய்ந்தது; அவன் ஹா "என்று அலறிக்கொண்டே விழுந்தான். இதைக் கண்ட திலகவதி நடுநடுங்கிப்போய் விலவிலத்து "ஐயோ!" என்று கதறிப் பதறித் தம்பமாக நின்றுவிட்டாள். கீழே விழுந்த கிழவன் "ஹா! பெண்ணே! உன்னிடம் நான் உண்மையைக் கூறிவிட்டதை இப் பாவிகள் கேட்டுவிட்டதால் நான் உயிருடன் இருந்தால் தங்களுக்கு என்ன ஆபத்து நேர்ந்துவிடுமோ என்று என்னைக் கொன்றுவிடுவதற்குச் சுட்டுவிட்டார்கள். நான் இவ்வுலகை விட்டு மறையச் செய்ததற்காக மனமார்ந்த வந்தனத்தையே அளிக்கிறேன். ஆயினும் நான் உன்னை நம்பி உன்னிடம் உண்மையைக் கூறிவிட்டதற்காக நீ எனக்குப் பிரதியுதவியாக இப் பாவிகளைக் காட்டிக் கொடுத்துவிடு. இவர்களால் கெட்ட குடிகள் அநந்தம். அது இம் மட்டுடன் நிற்கட்டும். இனியேனும் இப்பாவிகளால் கொடுமை இல்லாதிருக்கட்டும். ஹா! ஈசா! என்னை மன்னிப்பாயாக!'' என்று கூறிப் புரளுகின்றான்.

இதற்குள் அங்கு சுட்டு வீழ்த்திய மனிதனும், சோமுவும் உள்ளே ப்ரவேசித்து "அடேய் பேடியே! நீ சாகும்போதும் சபதமா!

ஆப்த சிநேகிதையைப் பிரியும்போது உண்டாகும் மனத் தத்தளிப்பைக் கூறத் திறமன்று. அவளைச் சந்தோஷமாக வழியனுப்பும்பொருட்டு எத்தனை தைரியம், பொறுமை முதலியவற்றை வரவழைத்துக் கொண்டா

அடி திலகவதி! உன்னிடம் இம்மகானுபாவன் தெரிவித்த செய்தியைக்கொண்டு நீ எப்படியோ சாதித்து விடலாம் என்றும், தப்பித்துக் கொள்ளலாம் என்றும் எண்ணிப் பெரிய கோட்டை கட்டாதே. அந்த பாச்சா இவ்விடம் பலிக்காது. நீ எங்கே எவ்விதம் இருக்கிறாய் என்பதைத் தெரிந்துகொள். இல்லையேல் இந்த துப்பாக்கியின் மற்றொரு தோட்டா உன்னைத் தாவி விளையாடும்; ஜாக்ரதை.'' என்று கூறி முடிக்குமுன் துப்பாக்கியால் சுடப்பட்டவன் இறந்துவிட்டான்.

திலகவதிக்கு ஒன்றுமே தோன்றவில்லை; ப்ரமை பிடித்துக் கல்லாய்ச் சமைந்துவிட்டாள். ஏதோ பேச வாயெடுக்கிறாள். இந்த பயங்கரமான கொலையைக் கண்டு கலங்கிவிடுகிறாள். "சோமு மாமா!'' என்று இழுத்தார்ப்போல அழைக்கிறாள். இதற்குள் சோமுவுடன்கூட வந்தவன் "அந்த மாமாவெல்லாம் இருக்கட்டும். வாயைத் திறந்தால்—வாலை யாட்டினால்—இந்த மனிதனைக் கொலை செய்த குற்றம் உன்னையே தாவி ஜோடிப்பாய் வரும். தெரியுமா! ஏற்கெனவே உன்னை கள்ளக் கையொப்பத்திற்காகப் போலீஸார் தேடித் திரிகிறார்கள். அதோடு கொலையும் சேரும். ஜாக்ரதை. வா இப்படி! என்று துப்பாக்கியைக் காட்டியபடியே அவ்வறையின் பின்புறமாகவே நடத்திச் சென்றான்.

அபலையான திலகவதி ஏற்கெனவே கொண்டிருந்த சந்தேகம் இன்னும் நன்றாக ஊர்ஜிதமாகிவிட்டது. "சோமு மாமா! தாங்கள் தேனென இனிக்கும்படிக் கூறி என்னை இவ்விதம் மோசம் செய்வது தான் உங்களுடைய யோக்கியதையின் லக்ஷணமோ! என்னை இனி ஏமாந்தவளென்று எண்ணவேண்டாம். மகா கொடிய கல்நெஞ்சமுடைய உங்களை எல்லாம் இதற்குத் தக்க தண்டனை—பலன்—அடையும்படி நான் செய்யாமல் போகப்போவதில்லை. என் கண் முன்பாகவே சற்றும் தயை தாக்ஷண்யமின்றி ஒரு கொலை செய்தாயிற்று. இன்னும் அந்தப் பாழுங் கரத்தினால் எத்தனை கொலைகளைச் செய்

லும் கண்ணீர் தடையின்றிப் பெருகி அவ் வுயிர்த் தோழியுடன் பேசவதற்கும் நாவெழாமல் செய்து விடுகின்றது. ஹா! அன்பே! உனது ஆழம் இப்போதன்றோ தெரிகிறது.

திருப்பீர்களோ! ஐயோ! சத்தியம், கடவுள், நாணயம், பயம் முதலியன எல்லாம் உங்களுக்கு அழிந்துவிட்டனவா! அனியாயக்காரர்களே! நான் செல்லமாட்டேன். என்னையும் சுட்டுவிடுங்கள் என் கஷ்டம் நிவர்த்தியாகட்டும்.

நேற்று சுகுமாரன் விஷயமாக நீ சொல்லியதெல்லாம் சுத்த மூட்டை வார்த்தைகள் என்று எனக்கு இப்போது நன்கு விளங்கி விட்டது. நான் உத்தமி பெற்ற உத்தமியாக இருப்பின் என்னுருயிர்க் காதலனுக்கு ஒருவிதமான தீங்கும் நேராது கடவுள் காப்பார்." என்று இவள் கூறி முடிக்கு முன்னர் சோமு வெகு அன்புள்ளவன் போல நகைத்துக் கொண்டே "திலகம்! என் காதல் கற்பகம்! கோபித்துக் கொள்ளாதே! உன் சுகத்திற்கு நான் ஒரு நாளும் பங்கம் விளைவிக்க மாட்டேன். வா! இப்படி. உன்னைக்கூட சுட்டுவிட்டு நான் எவ்விதம் உயிர் வாழுவேன்?" என்று காதல் மொழிகளைக் கூறிக்கொண்டே திலகவதியின் கையைப் பிடித்துப் பலமாக இழுத்து அங்குள்ள சோபாவில் உட்காரச் செய்தான்.

இச் செய்கை திலகவதியின் உயிரை வாங்கும் எமன் போல இருந்தது. அவள் சடக்கென்று திமிறிக்கொண்டு எழுந்து பக்கத்திலிருந்த அறைக்குள் ஓடி, கதவை தடாரென்று சாற்றித் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு தன் மனம் போனவாறெல்லாம் திட்டினாள். சோமு எத்தனை தரம் கதவை இடித்தும் அவள் திறக்கவில்லை. "இவ்விடத்தைவிட்டு எங்கு போகக் கூடும்? மற்றொரு சமயம் பார்த்துக்கொள்ளலாம்." என்று அவன் வெளியில் மரியாதையாகச் சென்றுவிட்டான்.

* * * * *

பெட்டிக்குள் அடக்கஞ் செய்யப்பட்ட நாயுடுகாரு முதலில் மிக்க பயம் உண்டாகி நடு நடுங்கிவிட்டார். எனினும்

"நாளைக் காலையில் நம்மாருயிர்ச் சினேகிதையின் ஜோதி ரயிலில் கிளம்பி நம்மை விட்டுப் புறக் கண்ணிற்கு மறைந்துவிடப் போகிறதே!" என்கிற ஏக்கம். இதற்குள் பொழுது விடிவு, ஸ்டேஷனை அடைதல், மனத்தை யடைக்கும் பிரிவாற்றுத் துக்கத்துடன் கட்டித் தழுவித் தடுமாறி நிற்றல். மணி யடித்து, பிகில் ஊதல். ஹா! ரயில் கிளம்பி விழுகி

அவர் தன் முயற்சியையும் தைரியத்தையும் விடாது மெல்ல அந்தப் பெட்டிக்குள்ளேயே இருக்கும் துணிகளைக் கிளறியும், பெட்டியைத் தடவியும் பார்த்தார். கையில் ஒருவிதமான ஆயுதமும் இல்லாமையினால் எவ்விதம் தான் அந்தப் பெட்டியை உடைப்பது என்று யோசித்தார். தன் மடியிலிருந்த சிறிய டார்ச்சு லைட்டை எடுத்து அப்பெட்டியைச் சுற்றிப் பார்த்தார். பெட்டியின் அடியில் ஓர் மூலையில் ஏதோ சிறிய ஆணிபோலத் தட்டியது.

இந்த ஆணி இங்கு அனாவசியமாக எதற்கு இருக்கிறது என்று அதை ஆட்டினார். வெளியில் இழுத்தார். உள்ளே தள்ளினார். அவ்வாறு உள்ளே தள்ளியதும் பெட்டியின் அடிப்பாகம் அப்படியே கீழே இறங்கியது. இது நாயுடுவின் ஆச்சரியத்தைக் கிளறிவிட்டது. "மேலே பார்ப்பதற்குப் பெட்டிபோலச் செய்துவிட்டு உள்ளே இவ்வித தந்திரம் வைத்திருக்கிறான்." என்று எண்ணி வியந்தவாறு அப்பெட்டியின் அடிப்பாகம் எங்கு இறங்கியதோ அங்கே இறங்கினார். கீழே செல்லச் செல்ல அவ்விடம் விசாலமாக ஆய்க்கொண்டே வெளிச்சமாயும் ப்ரகாசித்தது.

சுமார் 10 அடி கீழே சென்றதும் பலகை நின்றுவிட்டது. நாயுடு அதிலிருந்து கீழே இறங்கினார். அடுத்த நிமிடம் பலகை முன்போல பெட்டியில் போய் ஒட்டிக்கொண்டது. நாயுடு எத்தனையோ விசித்திரமான துப்புகளைக் கண்டு பிடிக்கையில் அவர் பார்த்துள்ள ஆச்சரியமான சம்பவங்களும் விஷயங்களும் அளவில்லை. அவற்றில் இத்தகைய பெட்டி அற்புதம் பார்ப்பது இதுவே முதல் தடவையாகும். பெட்டிக்குள் இந்த ரகஸிய அறை அமைந்திருப்பதிலிருந்து இங்கு ஏதோ பெரிய ஆச்சரியமான விஷயங்கள் இருக்கவேண்டும். இல்லையேல் இத்தனை பந்தோபஸ்தாகவிருக்கவேண்டிய ப்ரமேயமில்லை." என்று தனக்குள் யோசித்து ஓர் தீர்மானத்தைச் செய்துகொண்டார்.

றது. இரு விழிகளிலும் நீர் பெருகக் கை கூப்பியபடி ஆருயிர் உருவம் மறைந்து அவ்விடமே இருண்டு விட்டதுபோலாய் விடுகின்றது. வாடிய முகமும், வழிந்த நீர்த் துளிகளுடன் மங்கிய பார்வையுமாய் வீடு வந்து சேருகிறது.

அடிமேலடி எடுத்து வைத்து நடந்து சென்றார். இந்த அறைக்கு எந்தவிடத்திலிருந்து வெளிச்சம் எவ்விதம் வருகிறதென்பதை நாயுடு கவனித்துக்கொண்டே சென்றார். ஆளின் அரவமோ, வேறு எவ்விதமான சந்தடியும் கேட்கவில்லை. பின்னும் பார்த்துக்கொண்டே செல்கையில் பீடி பிடித்த துண்டுகள் சிலவும், கிறிய வத்திக்குச்சிகள் சிலவும் அங்கு காணப்பட்டன. அந்த இரண்டு சின்னங்களிலிருந்து இவ்விடத்தில் பீடி பிடிக்கும் ஆசாமிகள் இருக்க வேண்டும் என்பது நன்றாகத் தெரிந்தது. பின்னும் பார்க்கையில் கனகாம்பர மலர்களும், ரோஜா மலர்களும் உதிர்ந்திருந்தன. அவற்றைக் கவனமாக எடுத்துப் பார்த்தார். அவற்றில் பெண்களின் தலையில் உள்ள கேசம் ஒட்டிச் சிக்கிக்கொண்டிருந்தது.

இந்த சின்னத்திலிருந்து இங்கு பெண்களின் சம்மந்தமும் இருக்கிறதென்று தெரிந்து கொண்டார். மீண்டும் என்ன கிடைக்கும் என்று பார்த்துக்கொண்டே செல்கையில் இரும்பு ஏணி ஒன்று தென்பட்டது. அதன்மேல் ஏதோ அதிசயம் இருக்க வேண்டும் என்று எண்ணி அதன்மேல் ஏறத் தொடங்கி இரண்டு படிக் கட்டுக்கள் ஏறினர். உடனே திடீரென்று அவர் பிடித்திருந்த கைப்பிடியை இரும்பு வளையம் சுற்றி அவர் கைகள் இரண்டையும் கெட்டியாகப்பிடித்துக் கொண்டது. அதோடு கால்களிலும் அவ்வாறே வளையங்கள் விலங்குபோல ஏணியோடு சேர்த்துப் பிணைத்துக் கொண்டன. அவர் கழுத்தைச் சேர்த்து மாலை போடுவது போல ஓர் வளையம் மாட்டிக் கொண்டது.

இந்த அதி ஆபத்தான, பயங்கரமான விசைகள் இந்த ஏணியிலிருக்கும் என்பதை அவர் சற்றும் நினைக்கவில்லையாகையினல் நாயுடு நடுங்கியதோடு 'ஹா' என்றும் அலறி விட்டார். "ஐயோ! பெட்டி யாபத்தினின்றும் வெளியேறினன் என நினைத்துக் கர்வமடைந்தேனே! இதற்குள் விபரீதமான ஆபத்து வந்து விட்டதே!" என்று நடுங்கிப் பேந்தப் பேந்தப் பார்த்த படியே தத்தளிக்கிறார். கையை யசைக்கக் கூடவில்லை. காலையோ அப்படியே ஆணி யடித்து விட்டதுபோ லாய்விட்டது. இவருடைய தோற்றத்தைத் தூரவிருந்து பார்த்தால் ஆதியில் தெய்வாம்சமாகப் பிறந்த கிருஸ்துவைச் சிலுவையில் அடித்திருந்த காட்சி போலக் கோரமாயும்

பரிதாபகரமாயும் தோன்றியது. எத்தகையோருக்கும் தம்மை ய... யாத ஆபத்துக்கள் நேர்ந்து விடுவது சகஜமல்லவா ?

நமக்கு மிஞ்சிய கெட்டிக்காரர்கள் இல்லை என்ற கர்விகளும் சில சமயம் தோல்வி யடைவதுண்டு. நமக்கு நிகராகப் பாடுகிறவர் களே கிடையாதென்று வெகுவாய் இறுமாப்பு கொண்டு பாடகர்க ளையும் வித்வான்களையும் தூஷிக்கும் மனிதர்களும் பெரிய சபை யிலேயே தாம் பாடும் சங்கீதம் நன்கு அமையாமல் அவமான மடைவது முண்டு. எக் காரியத்தையும் தாம் ஜெயித்து விடலாம் என்று அகந்தை கொண்டவர்கள் அவர்கள் எதிர்பாராதபடி தோல்வி யடைவதோடு,தாம் யாரை மக்கு என்றும்,மூடம் என்றும் நினைத்தார்களோ அவர்களினாலேயே அக்காரியம் முடியும்படியாயும் நேர்ந்துவிடுகின்றது. தமக்கு மிஞ்சி சமையல் செய்யும் மனிதரே இல்லை என்று நினைக்கும் சமையல்காரர்களும் தம்மை யறியாம லேயே பாயசத்தில் பெருங்காயத்தைப் போட்டும், குழம்பில் குங்குமப்பூவைப் போட்டும், ரசத்திற்கு உப்பே போடாமலும் செய்து, பெரிய கல்யாணப் பந்தியில் அவமான மடைகி றார்கள். எத்தகையோருக்கும் தோல்வியும் ஆபத்தும் கைம்மேல் காத்திருப்பது சகஜமல்லவா ?

அதே போல நம் நாயுடுவுக்கு இவ்வித ஆபத்துக்கள் நேரு வது வெகு சகஜமாகிவிட்டது. கூண்டிலடைபட்ட சிங்கம்போல அவர் அந்த யந்திர ஏணி என்றறியாது அதில் அகப்பட்டுக் கொண்டு தத்தளிக்கின்றார். "அங்கு அம்புஜத்தின் கதி யாதா யிற்றோ! ஆளின் கதி என்னவோ! நாம் இவ்வித பேராபத்தில் சிக்கி விட்டோமே! நம்மைக் கட்டாயம் பிடித்துக் கொலை செய்துவிடப் போவது நிச்சயமேதான். இனி இதில் சந்தேகமே இல்லை. ஐயோ! எனக்கு இத்தகைய வழியிலேயே மரணம் என்பது நன்கு தெரிந்த விஷயமெனினும் சுகுமாரனின் கஷ்டத்தை நிவர்த்தி செய்யாமல் என்னைக் கடவுள் காட்டிக்கொடுத்துவிட்டாரே! என்ன செய்வேன்! அவனுக்கு வாக்குக் கொடுத்தது வீணாகிவிட்டதே!" என்று தவிக்கை யில், ஆள் நடந்து வரும் காலோசை கேட்டது. அதைக் கேட்ட தும் நாயுடு அபாரமான திகிலடைந்து இடிந்துபோய்விட்டார். நாற்புறமும் பந்தப்பட்டவர் எவ்விதம் திமிறக்கூடும்?

தொத்தி ஏறுவதில் சாக்ஷாத் ஹனுமானைப்போலவும், மருண்டு மருண்டு பார்ப்பதில் புள்ளிமான் குட்டியைப்போலவும் பர பரப் பாய்ப் பாய்வதில் புலியைப்போலவும் அம்புஜம் தொத்தி ஏறி அவ் வரையில் பதுங்கிக்கொண்டு, கதவைத் தாளிட்டுக்கொண்டு அட்ட காசமாய் உள்ளே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து பைசாசத்தைப் போலவே ஆடத்தொடங்கினாள்.

இதற்குள் இங்கிருந்து தூரத்திக்கொண்டு சென்ற மனிதன் அக்கதவை எத்தனை இடித்தாலும் உபயோகமற்றுவிட்டது. இவளைச் சேர்ந்த கூட்டங்கள் அங்கு சூழ்ந்துவிட்டார்கள். கீழே இருக்கும் நாயுடுவின் ஆளுக்கும் இதைக்கண்டு தாங்கமுடியாத நகைப்பு வருகிறது; எனினும் அதை யடக்கிக்கொண்டு "ஐயோ! அம்மாடீ!" என்று அடித்துக்கொண்டு இவர்களோடு சந்தடியில் சமாராதனை யைப் போல ஓட்டம் பிடித்து மெத்தையை அடைந்தான். "ஐயோ! இவ்விதமான உபத்திரவந்தான் தினம் செய்கிறது. நேற்று கூட ஓர் பெரிய பெட்டியில் புகுந்து கொண்டு வெளியில் வரமாட்டே னென்றது. எத்தனை பாடு பட்டாலும் பலனில்லாது போய்விட்டது. பிறகு பெட்டியை உடைத்து இவளை வெளியில் எடுத்தேன். இங்கும் இப்படிச் செய்து விட்டாளே! அடீ. அம்மா! அதிமதுரம்! அதி மதுரம்! இது மந்திரவாதி வீடு என்பதை மறந்து விட்டாயோ! ஐயோ! வெளியில் வந்து விடடீ!" என்று கத்தினான்.

உள்ளிருந்த அம்புஜம் பெருத்த இடி இடிப்பதுபோலச் சத்தம் செய்து நகைத்து "ஏண்டீ; இங்கு இருப்பது யார் என்று பார்த்தாய்? அதிமதுரம் எங்கிருக்கிறாள் தெரியுமா; ஹா ஹ்ஹ ஹா! அங்குதான் இருக்கிறாள்.

ஆத்தூர ஏரிக்கரை ஆலமரத்திருக்கும் ஆண்டியப்ப தேவனடீ
ஆயே! ஹாஹாஹா ஆண்டியப்ப தேவனடீ ஆயே; ஆயே!"
கையில் குடை பிடித்துக் காலில் ஜோடு மாட்டி
வேயிலில் செல்லுகையில் வேட்கையுடன் பிடித்துக்கொண்டேன்.

ஹா! ஹா! ஹா!......இப்போது நான் யாரு தெரியுமா, என்று கர்ஜனை செய்தாள். பெண்களை விழுங்கும் பேய்களாக விருக்கும் அம்மூடர்களும் இப்பேய் பிடித்த அம்புஜத்தின் வார்த்தையைக் கேட்டு மிக்க பீதியடைந்தார்கள். "எஜமான் வருவதற்குள் இந்த பிசாசை இவ்விடத்திலிருந்து ஓட்டவேண்டுமே!" என்று பயந்த வாறே கதவை உடைப்பதென்று தீர்மானித்து விட்டார்கள்.

புதிய நாவல் வெளிவந்து விட

ஸ்ரீமான் வடுவூர். கே. துரைசாமி ஐயங்கார் B. A.,
எழுதிய

மன்மதபுரியின் மூடு மந்திரம்

அல்லது

திகம்பரசாமியார் திரு நடன வைபவம்

விலை. ரூ. 2–12–0

ரூ. 3 முன்பணமனுப்பி தபாற்செலவின்றி பெற்றுக்கொள்ளுங்கள்.
வி. பி. கிடையாது.

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்
எழுதிய புதிய நாவல்

சோதனையின் கொடுமை

அல்லது

செல்வமே சொர்க்கம்

ஒரு நூலை அதன் அட்டவணையைக் கொண்டே மதிப்பிட்டுக் கூறலாமல்லவா?

அட்டவணை

1. தாய் வெறுத்தால் நாயும் வெறுக்கும்.
2. பெண்டாட்டி பித்தன் சண்டாள யோசனை.
3. தனத்தின் மூலம் கனத்த த்வேஷம்.
4. நிலையற்ற பணமே! கொலைக்கஞ்சாயோ!
5. தேடாத்துணைவன்—திகட்டாக் கல்வி.
6. ஜமீந்தாரிணியின் செறுக்கு.
7. காதல் உதயம்—களங்கமற்ற அன்பு.
8. அநாதை ஆச்ரமம்—விநோத விளம்பரம்.
9. தலைக்குக் கொள்ளி விலைக்கு வாங்கியது.
10. இடிமேலிடித்த பேரிடி.
11. தழல் மீது விழுந்த புழுக்கள்.
12. சாகர அலைகள்—மோகினி அவதாரம்.
13. அன்பு பூங்காவில் இன்புறும் கிளிகள்.

இத்தனை அதிகாரத் தலையங்கங்களுடன் 370 பக்கங்கள் கொண்ட அதியற்புதமான நாவல். அழகிய ஆப்டோன் படத்துடன் கூடிய அட்டையுள்ளது.

விலை ரூ. 1–8–0 சந்தா நேயர்களுக்கு ரூ. 1–4–0.

"ஜகன்மோகினி" ஆபீஸ், திருவல்லிக்கேணி.

ஸ்ரீமான் வடுவூர். கே. துரைசாமி ஐயங்கார் பி. ஏ.
எழுதிய நாவல்கள்.

	ரூ. அ.		ரூ. அ.
பூர்ண சந்திரோதயம்—	... 7—8	பாலாமணி—	... 2—8
சௌந்தரகோகிலம்	... 6—0	துரைக்கண்ணம்மாள்	... 2—4
திகம்பர சாமியார் பால்ய லீலை—	... 5—0	வசந்த மல்லிகா	... 1—8
கும்பகோணம் வக்கீல்	... 3—0	வஸந்த கோகிலம்	... 1—4
மாயாவிநோதப் பரதேசி	... 5—0	காதலின் மகத்துவம்	... 1—4
மதன கல்யாணி—	... 4—8	வித்தியாசாகரம்	... 1—4
விலாசவதி—	... 3—0	திலோத்தமா	... 0-12
மேனகா—	... 3—0	திவான் லொடபடசிங்	... 0-12
கனகாம்புஜம்—	... 2-12	பன்னியூர் படாடோபா சர்மா	... 2—4
		மிஸிஸ் லைலா மோகினி	... 3—0

உங்களுக்கு எந்த நாவல் இனாமாக வேண்டும்?

கீழ்க்கண்ட விவரத்தைப் படித்து, உங்களது நேயர்களின் சந்தாவை அனுப்பும்போது, வேண்டிய புத்தகங்களின் பெயரைத் தெரிவியுங்கள். மறு தபாலில் தபாற் செலவின்றி அனுப்புகிறோம்.

		பரிசு புத்தகங்கள்
(1)	ஒரு புதிய சந்தாதாரரைச் சேர்த்து முன்பண மனுப்புகிறவர்களுக்கு	இன்ப மனோகரி
(2)	2 புதிய சந்தாதாரர்களை ,,	நளினசேகரன் அல்லது மூன்று வைரங்கள் அல்லது வீரவஸந்தா
(3)	3 ,, ,,	கோபாலரத்னம்
(4)	4 ,, ,,	கதம்பமாலை அல்லது சுகந்தபுஷ்பம்
(5)	5 ,, ,,	கௌரீமுகுந்தன் அல்லது ஸாரமதி
(6)	6 ,, ,,	சண்பகவிஜயம்
(7)	7 ,,	சாமளநாதன் அல்லது ருக்மிணீகாந்தன் அல்லது நவநீதகிருஷ்ணன்
(8)	8 ,, ,,	வைதேகி அல்லது பத்மசுந்தரன் அல்லது ராதாமணி அல்லது சாருலோசனை அல்லது பரிமளகேசவன் & உத்தமசீலன்

"ஜகன்மோகினி" ஆபீஸ், திருவல்லிக்கேணி.

நீங்கள் பல வருஷங்களாக எதிர்பார்த்திருந்த
புத்தகத்தின்
இரண்டாம் பதிப்பு வெளிவந்துவிட்டது

"பிரஜாநுகூலன்", "அமிர்தகுணபோதினி" இவற்றின் பத்திராசிரியரும், பிரஸித்த கதாசிரியருமாகிய
ஸ்ரீமான் எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு
இயற்றிய

ஆநந்த கதா கல்பகம்

(முதல் வால்யம்)

இதில் 22 நாவல்களும், 27 கதைகளும், 890 அநுபவ ரகவிஷயங்களும், வேறு பலவும் அடங்கியுள்ளன.

912 பக்கங்களுள்ள மகா பெரிய நாவல்

மிகவும் குறைந்த விலை ரூ. 3 தான் : தபாற் செலவு அணா 8.

பாலிகா கல்பகம்

சிறுமிகளுக் கவசியமான நூல் விலை அணா ஆறு.

நமக்குத் தெரிந்த வரையில்
தமிழ்ப் பத்திரிகையுலகில் இதுவரை
நடைபெறாத சம்பவம்

இனாம் முற்றிலும் இனாம்

இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்படும் நாவல்கள்

நமது
ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனாம்

இதர சஞ்சிகைகளைப் போல நாமும் ஜீவிய சந்தா ஏற்படுத்த வேண்டுமென்று அநேகர் கோருவதால், ரூ. 25 முன் பண மனுப்புகிறவர்களை நமது ஜீவிய சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்வதுடன், இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களையும் இனாமாக அனுப்புவோம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ், திருவல்லிக்கேணி.

வெளிவந்துவிட்டது புதிய புத்தகம்

க த ம் ப மா லை

அநுபவக் களஞ்சியம்
ஆனந்த வெள்ளம்
இன்ப மணிகள்
ஈடிலாக் கனிகள்
உத்தமப் போக்குகள்
ஊன்றிய சொற்கள்
எளிய நடை
ஏனையோர்க்கும் விருந்து
ஐயமகற்றும்
ஒப்பற்ற நீதிகள்
ஓதற்கரிய
ஔதாரிய குணங்கள்

ஹாஸ்ய ரஸம் இவையனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற உயரிய கதைகளடங்கிய இனிய புத்தகம்

அ/00ழ4

விலை ரூபாய் ஒன்றேதான்.

தபாற் செலவு இனும்!

ஒரு சந்தோஷச் செய்தி

நமது சந்தா நேயர்களில் பலர், நமது புத்தகங்களை வாங்கும்போது, தங்களுக்கு வேண்டிய இதர புத்தகங்களையும் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறார்கள். நாம் வேறு புத்தகங்களைக் கையில் வைத்துக் கொள்வதில்லை யாகையால், மற்றவற்றை அனுப்ப முடியாதென்று எழுத வேண்டி யிருக்கிறது. அநேக நேயர்கள், தங்களுக்கு வேண்டிய புத்தகங்களை தனித்தனியாக ஒவ்வொரு புத்தகசாலையினின்றும் வரவழைப்ப தென்றால் தங்களுக்கு அதிக தபாற் செலவு ஏற்படுகிறதென்று எழுதுவதால், எல்லோருடைய சௌகரியத்தையும் உத்தேசித்து இனிமேல் நமது சந்தா நேயர்கள் கேட்கும் புத்தகங்களை வாங்கி யனுப்பத் தகுந்த ஏற்பாடு செய்துள்ளோம். ஆகையால் நேயர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களின் விவரமும், அவற்றின் முழு கிரயமும் முன்பணமாக அனுப்பினால் அவற்றை தபாற் செலவில்லாமல் அனுப்புகிறோம். ஐந்து ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கே தபாற் செலவில்லாமல் அனுப்ப முடியுமாதலால், அதற்குக் குறைந்த ஆர்டர் செய்பவர்கள் நான்கணா சேர்த்து அனுப்பவும். இந்த ஏற்பாட்டின்படி வி. பி. யில் அனுப்பமுடியாது.

மேற்கண்ட ஏற்பாட்டினால் இனிமேல், நமது சந்தா நேயர்களும், அவர்களது நண்பர்களும் தங்களுக்கு வேண்டிய சகல புத்தகங்களை தபாற் செலவும், வீண் அலைச்சலு மின்றி பெற்றுக்கொள்ள முடியுமென்பதை கவனிக்கக் கோருகின்றோம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ், திருவல்லிக்கேணி.

THE TATA PRESS, MADRAS.

ஒரு அரிய சந்தர்ப்பம்!

இனி ஸ்திரீகளும்

இன்ஷியூர் செய்யலாம்.

தற்போது நமது தேசம் மாறுபட்டுள்ள நிலைமையில், முன்னை வி— அதிகமான ஸ்திரீகள் தங்கள் ஆயுளை இன்ஷியூர் செய்ய வேண்டியதின் அவசியத்தையும், அதற்கு வேண்டிய வசதிகள் அளிக்க முடியு மென்பதையும் கருதி,

யுனைடெட் இந்தியா அஷியூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.

சில நிபந்தனைகளுக் குட்பட்டு, ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ்களை இப்பொழுது ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கின்றது.

ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ் சம்மந்தமாக முழு விவரங்களும் தங்கள் கடிதம் கண்டவுடன் அனுப்பப்படும்.

படித்த ஸ்திரீகளிடமிருந்து இந்த கம்பெனியின் ஏஜண்டு பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தக் கம்பெனியின் ஏஜண்டாக இருப்பதால், நமது ஜன சமூகத்திற்குத் தொண்டு புரியவும், ஒரு நிரந்தரமான வருமானம் அடையவும் சந்தர்ப்பம் வாய்க்கின்ற தென்பதைக் கவனியுங்கள்.

"யுனைடெட் இந்தியா"
கட்டடம்
செம்புதாஸ் தெரு,
சென்னை.

எம். கே. ஸ்ரீநிவாஸன்,
பி. ஏ., பி. எல்.,
மானேஜிங் டைரெக்டர்.

"கொலம்பியா"வின்

புதியதொரு ஜோதி

"ஜகன்மோகினி" ஆசிரியையான

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதியுள்ள நாவல்களைப் படித்து மகிழ்ந்திருப்பீர்கள்
அவர்களது பிரசங்கங்களையும் கேட்டு ஆனந்தித்திருப்பீர்கள்

ஆனால்

அவர்களது கர்ணாமிருதமான சங்கீதத்தைக் கேட்டிருக்கமாட்டீர்கள்
உங்களுக்கு வேண்டியபோதெல்லாம் அதைக் கேட்டு
இன்பமடையும்படி செய்வது

எது?

எங்களது கொலம்பியா ரிகார்டுதான்

அவர்களே கவனஞ் செய்துள்ள பாடல்களை, அவர்களது இனிமை
யான சாரீரத்தில் பாடியிருப்பதை நேரில் கேட்பது போல
அவ்வளவு சுத்தமாக ரிகார்டு செய்திருக்கிறோம்.

முதல் ரிகார்டை இன்றே கேளுங்கள்

GE 197	ஏழை முகம் பாரய்யா	ஸிந்து பைரவி	விலை
	போகுது பார் பணம்	நட பைரவி	ரூ. **2-12-0**

ஆர்ஸ் கொலம்பியா ஹவுஸ்

மதராஸ்

எல்லா "கொலம்பியா" ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.